

# ரமணோதயம்

ஜனவரி 2023

காலாண்டு

ஜயந்தி இதழ்

விலை ₹ 20



# ரமணோதய அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

ரமணோதய சந்தா புதுப்பிக்காதவர்கள் தயவுசெய்து தங்களது சந்தாவைப் புதுப்பிக்கவோ அல்லது ஆயுள் சந்தாவாகச் செலுத்தவோ செய்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

உதயம் 22 ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய மலர் 2

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

ஜயந்தி இதழ்
ஜனவரி 2023

ஆசிரியர்: Dr. S. ராம் மோஹன்

- கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
- கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.
- மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

ஆண்டு சந்தா: ₹ 75 தனி பிரதி: ₹ 20
ஆயுள் சந்தா: ₹ 1500

காசோலை/மணியார்டர் 'ரமணோதயம்' என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா டிரஸ்ட், 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்புக்கு அணுகவும்:
ஆ. குமார் ராஜா: 9444261296
மின்னஞ்சல்: arunamramanam@gmail.com
மேலாளர் கண்ணன்: 9940418375

வடிவமைப்பு: ஸ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:
ஆ. குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்
41, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமண கேந்திரா டிரஸ்ட், சென்னை 4
தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

ஜயந்தி இதழ், ஜனவரி 2023


| வ.எண் | பொருள் | | ப.எண் |
|---|---|---|---|
| 1 | ஆசிரியர் உரை | | 3 |
| 2 | இனிவரும் திருநாட்கள் | | 16 |
| 3 | ஔவைக் குறள் | ராம் மோஹன் | 17 |
| 4 | நம்பிக்கையும், முழு அர்ப்பணிப்புமே பக்தி | ஆகுரா | 23 |
| 5 | பேரமைதி நிலவிய பெருநாட்கள் | | 29 |
| 6 | என். ஆர். கே (1) வி. நிரஞ்சன் | | 33 |
| 7 | ரமண மையங்களை நோக்கி தொடர் பயணக் கட்டுரை | | 45 |
| 8 | நான் | மகா கவி பாரதியார் | 50 |
| 9 | ஹம்சா ராமையா பகவானின் மடியிலும் காலடியிலும் | ரவி & ஸ்ரீதர் | 51 |
| 10 | எண்ணலை இறும் என்றருணாசலா | தீபா மகேஷ் | 61 |
| 8 | மௌன நதி | D. தியாகராஜன் | 65 |
| 11 | செய்திகள் | | 75 |

# ஆசிரியர் உரை

## அடியாரைப் புரக்கும் ஆண்டவன்

பகவானின் அருட்பொழிவு எத்தகையது? நமக்கு அவனது அருளைப் பெறும் தகுதி இல்லாமல் இருக்கலாம். பகவானது அருட்பொழிவு நம் தகுதிபற்றி அமைவதல்ல. "அது தானே வந்து நம்மைத் தலையளித்து ஆட்கொண்டு அருளும் பேரன்பு". மணிவாசகர் திருவெம்பாவையில் "ஆட்கொள்ளும் வித்தகர்" என்று இறைவனைக் குறிப்பிடுகிறார். ஆட்கொண்ட வித்தகர் என்னாமல் ஆட்கொள்ளும் வித்தகர் என்னும் சொற்பிரயோகம் சிறப்பு மிக்கது. தம்ஒருவரை மற்றுமல்லாமல் எல்லாக் காலத்தும் எல்லா இடத்தும் எல்லா உயிர்களையும் தானே வந்து ஆட்கொள்ளும் சீர்மை மிக்கது அவரது திருவருள் நாய், குரங்கு, மயில், குருவி, மற்றும் பல ஜீவராசிகள், தாவரங்கள் அனைத்திற்கும் அவரது பேரருள் விகாசித்தது. யாரும் கேட்காமலேயே அரவணைக்கும் பேரன்பு அவருடையது. பகவான் வாழ்க்கையில் பல்வேறு நிகழ்வுகள் இதற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன.

விளாச்சேரி ரங்கய்யர் எனும் அன்பர் ஒருமுறை பொருளாதாரத்தில் மிக நலிவுற்கு, கடன் சுமை தாங்காமல் சிரமப்பட்டார். வேலையும் போனது. வேலைதேடி சென்னை வரும் வழியில் பகவானைத் தரிசிக்க திருவண்ணாமலை வந்தார். குடும்பத்தை ஊரிலேயே விட்டுவிட்டு தனியாக வந்தார். நமஸ்கரித்து எழுந்த அவரிடம் பகவான், "ரங்கா! நீ எங்கேயும் போய் எப்படியும் வாழலாம். ஆனால் உனது மனைவிக்கும்,

குழந்தைகட்கும் போக்கிடம் வேறு இல்லையே! அவர்கட்குத் தேவையானதை ஏற்பாடு செய்து விட்டு வந்திருக்கிறாயா?" என்று வினவினார். அப்படி ஏதும் செய்திராத ரங்கய்யர், "பகவான் கேட்டுவிட்டாரே" என்று "ஆமாம். அவர்கட்குத் தேவையான பணத்தைக் கொடுத்துவிட்டு வந்திருக்கிறேன்!" என்றார். பகவான் அவர் பதிலில் திருப்தி அடையாமல், "என்னமோ சொல்கிறாய்! சரி, சரி!" என்றார்.

சில நாட்களிலேயே ஊரில் இருந்து ரங்கய்யரின் அண்ணா பகவானிடம் வந்தார். அவரிடம் பகவான் விசாரித்து, ரங்கய்யர் சொன்னது உண்மையில்லை. அவர் கடன் தொல்லையில் மிக வாடுகிறார் என்று அறிந்தார். அண்ணா திரும்பிச் சென்றபின் சென்னை சென்றிருந்த ரங்கய்யர் வேலை ஏதும் கிடைக்காமல் வெறும் கையுடன் பகவானிடம வந்தார். மீண்டும் வந்த ரங்கய்யரிடம் பகவான், "ரங்கா! நீ பணம் கொடுத்துவிட்டு வந்தேன் என்று சொன்னாயே! ஆனால் உன் குடும்பம் ஊரில் மிகச்சிரமப்படுவதாகக் கூறினார்களே!" என்று கேட்டார்.

ரங்கய்யர் தமது குட்டு வெளிப்பட்டு விட்டதை அறிந்து, பணக் கஷ்டத்துடன் மனக் கஷ்டமும் சேர்ந்துகொள்ள, தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுத்துக் கொண்டு இருந்தார்.

"என்ன ரங்கா! தூக்கம் வரவில்லையா?" என்ற ஆதுரமான குரல் கேட்டது. எழுந்து பார்த்தால் அருகில் பகவான் அமர்ந்து இருக்கிறார். ரங்கய்யர் உடனே எழுந்து உட்கார்ந்தார்.

"காசு பணத்தை நினைச்சுக் கவலைப்படறயா? இதெல்லாமே ஒரு சொப்பனம் மாதிரி. சொப்பனத்தில் யாராவது அடித்தால் அப்போது வலிக்கின்ற உணர்வு கனவின் ஒரு பகுதியாகவே அமைகிறது. வலியும்

கனவிலேயே உணரப்படுகிறது. கண் முழிச்சப்பறம் இந்த வலியோ உணர்வோ இருக்கிறதா?" என்றார். "சரி! கவலை எதற்கு? இந்தப் பத்தாயிரம் ரூபாய் கடனுக்காகவா? அது தானே வரும்! தூங்கு! என்றார் பகவான். பகவான் தரிசனத்தில் ரங்கய்யர் கவலை நீங்கித் தூங்கினார்.

மிகச் சில நாட்களிலேயே ரங்கய்யருக்கு ஒரு மோட்டார் கம்பெனியின் கமிஷன் ஏஜண்டாக வேலை கிடைத்தது. அவரது கமிஷன் தொகை கணக்கிடப்பட்டு, பகவான் கூறியதுபோல் மொத்தமாய் பத்தாயிரம் ரூபாய் கைமேல் கிடைத்து, ரங்கய்யரின் கவலை முற்றும் நீங்கியது. அதுவே பகவானின் தானே வந்து அருளும் பெருங்கருணை. நாம் அதற்குத் தகுதியானவரா என்பது பற்றி அந்தத் தயாசாகரம் பொருட்படுத்துவதே இல்லை. "சங்கரனார் தம்மைப்போல் தம் அடியவர்க்கு இன்பம் அளிப்பவர்" என்பது சம்பந்தர் தேவாரம்.

உலகியலிலே தலைவராய் இருப்பவர் தமக்கு ஆட்செய்ய அனைவரையும் ஏற்றுக் கொள்வதில்லை. ஒரு சிலரை மட்டுமே ஆய்ந்து எடுத்து மற்றவர்களைப் பட்டியலில் இருந்து நீக்கி விடுவர். பகவானோ தம்மை அடைந்தவர் அனைவரையுமே விரும்பி ஆட்கொண்டு அருள் புரிகிறார்.

இதற்கு எடுத்துக்காட்டாக, ஒருநாள் சில விறகு வெட்டிகள் கந்தாஸ்ரமம் வந்தனர். பகவானிடம், "சாமி! பசிக்குது. ஏதேனும் சாப்பிட இருந்தா கொடுங்கள்!" என்று கேட்டனர். பகவானின் அன்னை ஆசாரம் பின்பற்றுபவர். ஆதலின் தான் சாப்பிடுவதற்கு முன் பிறர் சாப்பிடுவது ஆசாரத்திற்கு விரோதம் என்பதால், பகவான் குஞ்சுசுவாமியிடம், "அம்மாவை ஆகாரம் கொண்டுவந்து தரச்சொல்லு" என்று கூறியதைக் கேட்டவுடன், தயக்கத்துடன் அன்னையார், "நான் இன்னும் சாப்பிடவே இல்லை என்று பகவானிடம் கூறு" என்றார். இதைக் குஞ்சுசுவாமி பகவானிடம் கூறியவுடன் பகவான் நேரே

உள்ளேவந்து அன்னையின் கையைப் பற்றி "இதுதான் காரணமா? இங்கு யார் வந்திருக்கிறார்கள் என்று பார்!" என்று வெளியில் கூட்டி வந்தார். அங்கு நின்றிருந்த விறகு வெட்டிகளைக் காட்டி "நீ உன்னைவிட அவர்கள் எல்லாம் நிலையில் தாழ்ந்தவர்கள் என்று நினைக்கிறாய். உண்மையில் அவர்கள் யார் தெரியுமா? அவர்கள் எல்லா சாட்சாத் அருணாசல ஸ்வரூபம்" என்றார். அந்த நொடியில் அன்னையைப் பிணைத்து இருந்த ஆசாரக் கட்டுகள் அறவே நீங்கின.

அதுவே ஆண்டவனின் அருள் தன்மை. மிகத் தகுதி குறைந்தவர்களையும், ஒரு தகுதியும் இல்லாதவரையும் தானே தன் பேரருளால் விரும்பி வந்து ஆட்கொள்கிறான். "நாயிற் கடையாம் நாயேனை நயந்து நீயே ஆட்கொண்டாய்" என்றும், "யாவரும் பெற்றறியா இன்பத்துள் வைத்தாய்" என்று மணிவாசகர் கூறுவதனை ஒத்து பகவானின் பேதமற்ற பேரருள் அமைகிறது. "பொன்தவிசில் என்னை ஏற்றி வைத்தான்" என்றும், "மேருமலை அடைந்த காக்கையும் பொன் நிறம் பெற்றதுபோல்" என்று ஒரு தகுதி அற்ற தன்னையும் பகவான் திருவருள் மேலேற்றியது என்று முருகனாரும் பகவானின் அருளை வியந்து பாடுகிறார். பரம்பொருளான பகவான் நம்மை உய்விக்கும் பொருட்டு, பரமாத்ம நிலையை விட்டு, மண்ணுலகம் பிறந்து நம்மை வழி நடத்த வந்ததை பகவானே "தன்மயம் செழிக்கத் தன்பதம் எனக்குத் தந்தனன்" என்று நவமணிமாலையில் கூறுகிறார்.

"வான் பழித்து இம் மண் புகுந்து, மனிதரை ஆட்கொண்ட வள்ளல்" என்று திருவாசகம் போற்றுவது பகவானுக்கும் சிறப்பாகப் பொருந்தும் அன்றோ!"

இவ்வுலகத்து எஜமானர்கள் தமது அடியாட்களுக்குக் குறைந்த ஊதியமே தந்து, நிறைந்த பலவேலைகளை வாங்கிக் கொள்வர். பகவானாகிய யஜமானரோ தனக்காக வந்துள்ள அடியவர்கள் வேண்டுவதற்கு

மேலாகவே தருவான். "வேண்டுவார் வேண்டுவதே ஈவான்" என்பது அப்பர் தேவாரம். "ஆசை தீரக் கொடுப்பார் அலங்கல் விடைமேல் வருவார்" என்பது சம்பந்தரின் திருக்கடைக் காப்பு.

பகவானாகிய ஞானப்பேரருள் தனது பெருங்கருணையால் அடியார் அனைவர்க்கும் வேண்டியதை அளித்து, அவர் துன்பத்தையும் தானே பெற்றது. பகவான் வாக்கிலேயே இது தெளிவாகிறது. 1945-ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆஸ்ரமம் வந்த என்.ஆர். கிருஷ்ணமூர்த்தி ஐயர் பகவான் தேஹம் நலிவுறுவதைக் காண்கிறார். பகவானிடம், "பகவானே! உங்கள் கருணையால் பக்தர் பல்லோரது தீராத வியாதிகள் எல்லாம் தீர்ந்துள்ளது. அதன் பாதிப்பு பகவான் உடல் நலத்தைத் தாக்கி இருக்குமா?" என்று கேட்டார். (மேற்கத்திய சமய தத்துவத்தில் இதை Vicarious Suffering என்று கூறுவர்).

பகவான் "ஆம் என்றும் சொல்லலாம் இல்லை என்றும் சொல்லலாம்" என்றார்.

"அது எப்படி?" என்று வினவினார் N.R.K.

பகவான்: முக்தனுக்கு உண்மையை உணர்ந்தபின் உடம்பு தேவையில்லை. ஆயினும் அவன் உடலோடு இருப்பது பரேச்சையினால்தான் (மற்றோர் பொருட்டு). அவன் தேகத்தோடு இருக்கிற வரைக்கும் பக்தர்தம் நோயை அவன் தேகத்திலே வாங்கிக் கொள்ளலாம். அதனாலே ஜீவன்முக்தன் தேகம் கொஞ்சகாலம் அவதிப்படும். அதுதான் நான் 'ஆமாம்' என்று சொல்வதன் அர்த்தம்.

யாருடைய தொந்தரவும் இல்லாமலே எங்கேயாவது ஒரு மூலையில் உடல் உலகை மறந்து சமாதி நிலையில் ஆழ்ந்தால் அந்தக் கர்மமும் பொசுங்கி விடும்.

திரும்ப உடல் வரும்போது ஆரோக்யமாக வரும். எவ்வளவு காலம் சமாதி நிலையில் இருப்பது என்பது வாங்கிய கர்மத்தின் அளவைப் பொறுத்தது.

ஆதிசங்கரர் சிறு வயதிலேயே ஞானமடைந்தார். நல்ல ஆரோக்யத்துடன் பாரத தேசத்தையே வலம் வந்தார். எப்போதும் ஸஹஜ சமாதி நிலையில் இருந்ததால் பல செயல்களைச் செய்ய முடிந்தது. ஆனால் கருணையாலே அவர் ஏற்றுக்கொண்ட பக்தர்களின் கர்ம மூட்டைகளை தனிமையிலே சமாதி நிலையில் இருந்து போக்கவில்லை. அதனாலே சிறுவயதிலேயே உடலை நீத்தார்" என்று விடையிறுத்தார் பகவான்.

முருகனாரும், பகவான் மலைமீது இருந்தபோது பகவான் தேகம் நலிவுற்று மீண்டும் இயல்பு நிலைக்குவந்த சம்பவத்தைக் கேட்டபோது இதே பதிலையே பகவான் அவரிடம் கூறினார்.

இதனை முருகனார்,

"அன்பர்தம் பொல்லா வரிட்டம் அனைத்தும்ஏற்று
என்பு தோலாத் திருமேனி இளைத்தும்"

என்று கீர்த்தித் திருவகவலில் குறிப்பிடுகிறார்.

உலகவியலில் எஜமானர்கள் தம் அடியாருடன் கொண்டுள்ள உறவு தலைவன்-பணியாளன் என்பது மட்டுமே. பகவானோ தம் அடியவர்க்கு வெறும் தலைவனாய் மட்டுமே இல்லாமல் தந்தையாகவும், தாயாகவும், துணைவியாகவும், தனயனாகவும், தோழன் ஆகவும், ஸத்குருவாகவும் மற்ற எல்லா உறவுகள் ஆகவும் பன்முகத் தன்மையில் வந்து நலம் புரிகின்றான்.

"ஈன்றாளுமாய் எனக்கு தந்தையுமாய் உடன் தோன்றினராய்" என்கிறது அப்பர் தேவாரம்.

ஸ்ரீமுருகனாரும் ரமண சந்நிதி முறையில் பகவானைப் பல்முக வடிவில், காதலானகவும், தோழனாகவும், தேவனாகவும், நற்றாய் ஆகவும், செவிலியாகவும்



அம்மானை, தெள்ளேணம் முதலிய பாடல் வடிவிலும் பலவிதமாக வழுத்துகிறார்.

உலக வாழ்வில் பெரும்பாலும் ஊழியரிடம் கடுமையாக இருப்பதையே காண்கிறோம். ஆனால் ரமண பிரான் அத்தகைய இதயமற்ற எஜமானன் அல்லன். அடியாரிடம் அன்பும் பரிவும் காட்டுபவன்.

“கண்ணுளார் கருவூருள் ஆனிலை அண்ணலார் அடியார்க்கு நல்லரே” என்பது சம்பந்தர் தேவாரம்.

“அடியார்க்கு நல்லவர் பகவான்” என்பதற்கு எடுத்துக்காட்டு பகவான் டி.கே. சுந்தரேச ஐயருக்கு தந்த விளக்கமே. டி.கே.எஸ். எப்போது பகவானைக் காணச் சென்றாலும் அவரால் இயன்றவரை ஏதேனும் வாழைப்பழமோ, கல்கண்டோ வாங்கிச் செல்வார். ஒருமுறை பகவானைக் காணச் சென்றபோது அவரிம் ஒரு வாழைப்பழம் வாங்கக் கூடக் காசில்லை. வெறுங்கையுடன் எப்படி பகவானைக் காணச் செல்வது என்ற தயக்கத்துடன் போகாமல் இந்து விட்டார.

சிறிது நேரம் போகாமல் இருந்தபின்பு பகவானை எப்படியும் தரிசித்து விடவேண்டும் என்ற உத்வேகம் உந்தித் தள்ள பகவானிடம் ஓட்டமும் நடையுமாய் வந்து பகவானை நமஸ்கரித்தார். கண்ணீர் பெருக, “பகவானே! கையில் காசேதும் இல்லாததால் வெறுங்கையுடன்

வந்துவிட்டேன்" என்று கண்களில் கண்ணீர் பெருகக் கூறினார்.

பகவான், "சுந்தரேசா!" என்று அழைத்து, "ஏன் வெறுங்கையோடு வந்திருக்கிறேன் என்று கூறுகிறாய்? நீ வெறுங்கையுடன் வரவில்லை. எனக்கு மிகவும் முக்யமானதைக் கொண்டு வந்திருக்கிறாயே! மற்ற எதுவுமே தேவையில்லை" என்றார். டி.கே.எஸ். ஒன்றும் புரியாமல் திகைத்தார். பகவான், "உன்னையே என்னிடம் ஒப்படைக்கக் கொண்டு வந்திருக்கிறாயே! இங்கு வருவதன் நோக்கமே அதுதானே" என்றார் பகவான். டி.கே.எஸ். நெஞ்சில் ஆயிரம் மலர்கள் அந்தக் கணமே பூத்திருக்கும்!

"தன்னில் சிறந்தது பிறிது ஒன்று இல்லாமையால் தன்னையே ஈந்தனன்" என்று குமண வள்ளலைப் பற்றிப் புறநானூறு 165-ஆவது பாடலில் பெருந்தலை சாத்தனார் பாடியது நினைவுக்கு வருகின்றதல்லவா!

இவ்வுலகில் தலைமக்கள் என்பார் தம்மைக் கண்டு பிறர் அஞ்சுவதையே கருவியாய்க் கொண்டு கீழ்ப்பட்டோரைப் பணிய வைத்து ஆள்வர். ஆனால் ரமண பகவானோ அடியவரின் அச்சத்தைப் போக்கி ஆட்கொண்டு அருளுவான். உள்ளது நாற்பது மங்கல வெண்பாவிலேயே பகவான் இதை அறுதியிட்டுக் கூறுகிறார். எல்லா அச்சத்திலும் பெரிய அச்சம் மரணத்தைப் பற்றிய பயமே. அந்தப் பெரிய அச்சமே அவனைச் சரண் அடைந்தபின் முற்றிலும் அழிந்து விடுகிறது.

"மரணபய மிக்குள்அம் மக்கள் அரணாக
மரணபவம் இல்லா மகேசன் சரணமே
சார்வர்தம் சார்வொடுதாம் சாவுற்றார் சாவெண்ணம்
சார்வரோ சாவா தவர்."

என்கிறார் பகவான்.

"அச்சம் முழுதும் நீக்கி ஆள்பவரே பகவான்.
அச்சம் தீர்த்து ஆட்கொண்டான்

*அமுதம் ஊறி அகம் நெகவே புகுந்து*
*ஆண்டான் அன்புகூர”*

*என்றும்*

*“அறம் பாவம் என்றிரண்டு அச்சம்*
*தீர்த்து என்னை ஆட்கொண்டான்”*

*என்றும் மாணிக்கவாசகர் ஆயிரம் ஆண்டுகட்கு முன் பாடியது பகவானுக்குக் கச்சிதமாகப் பொருந்துகின்றது அல்லவா!*

*தலைவர் பலரிடம் வேலைசெய்வது மிகக் கடினமாக இருக்கும். தமது அடியவர்களை மிகவும் அலைக்கழித்து இடைவிடாமல் செயலில் ஈடுபடும்படி விரட்டிக் கொண்டே இருப்பர். ஆனால் பகவானாகிய தலைவரே தன் அடியார்க்கு வேலை எதுவுமே செய்ய வேண்டும் என்று கூறுவதில்லை. தன்னை நாடி வந்தவரை எந்த வேலையுமே செய்ய வேண்டாம் என்றே கூறுகிறார்.*

*அருளியல் வாழ்வில் “சும்மா இருத்தல்” என்பது ஒரு மிகச் சிறந்தநிலை.*

*“இன்று வருமோ! நாளைக்கே வருமோ! அல்லது மற்று*
*என்று வருமோ! . . . .*
*சும்மா இருக்கும் சுகம்”*

*என்று பாடுகிறார் இராமலிங்க அடிகள். முருகன் தனக்கு அருளிய உபதேசத்தைக் கூறும்போது,*

*“சும்மா இரு! சொல்அற! என்றலுமே*
*அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே..”*

*- (கந்தரனுபூதி - 12)*

*என்று உருகிப் பாடுகிறார் அருணகிரியார்.*

*“. . . என்னுடைய*
*செயல் மாண்டவா பாடி தெள்ளேணம் கொட்டாமோ!”*

*- (திருத்தெள்ளேணம்)*

*என்று புகல்கிறது திருவாசகம்.*

"சும்மா இரு! சொல்லற!" என்ற முருகனின் உபதேசத்தை முருகனாரைப் பண்படுத்தும் பயிற்சியாகவே காட்டுகிறார் பகவான். ஒருமுறை ஆஸ்ரமத்தில் அன்னை ஆலயத்தில் பூஜை செய்ய ஒருவரும் இல்லாதபோது சின்ன சுவாமி முருகனாரை பூஜை செய்ய நியமித்தார். முருகனாரும் அதைத் தவிர்க்க முடியாமல் ஒப்புக் கொண்டார். ஆயினும் அது அவருக்கு எளிதாக இல்லை. மாத்ருபூதேஸ்வர லிங்கத்திற்கு அபிஷேகம் செய்யும்போது ஏற்கெனவே படிந்துள்ள எண்ணெய்ப் பசையைப் போக்கி, கைகளால் தேய்த்துத் தேய்த்து குடம் குடமாய் தண்ணீர் விட்டு அலம்பிக் கொண்டே இருப்பார்.

ஒருநாள் முருகனார் இப்படித் தேய்த்துக் கொண்டு இருக்கும்போது, பின்னால் வந்து நின்ற பகவான், "நீர் தேய்க்கிற தேய்ப்பைப் பார்த்தால் கொஞ்ச நாளில் லிங்கமே காணாமல் போய்விடும்போல் இருக்கிறதே" என்று நகைத்தார்.

மற்றொருநாள் பூஜையில் முருகனார் கற்பூரம் காட்டும் சமயம் பகவான் வந்தார். அவர் வந்து பின்னால் நிற்பதை முருகனார் அறியவில்லை. ஒரு கையில் மணியையும், மறு கையில் கற்பூரத் தட்டையும் எடுத்துக்கொண்டு தீபாராதனை காட்டத் துவங்கினார். மணி அடித்தால் கற்பூரத்தட்டு சுற்றுவது நின்று விடுகிறது. கற்பூரத் தட்டைச் சுற்றினால் மணி அடிப்பது நின்று விடுகிறது.

எப்படி இரண்டையும் ஒன்றாகச் செய்வது என்று முருகனார் குழம்பி நிற்கும்போது, பின்னால் இருந்து பகவான் குரல் கேட்டது. "போதும்! போதும்! நன்னா இருக்கு நீர் பூஜை செய்யும் லட்சணம்! பூஜை மணி அடிப்பது அழகும் கற்பூரம் காட்டும் தரமும் மிக உயர்வு."

திடுக்கிட்ட முருகனார், "என்னால் இனிமேல் பூஜை செய்யமுடியாது. நான் சின்னசுவாமியிடம் சொல்லிவிடுகிறேன். பூஜைக்கு முழுக்குப் போட்டாச்சு" என்றார்.

*பகவானும், "சரி! சரி! பூஜைக்கு மோட்சம் கொடுத்தாச்சு!" என்றார்.*

*இந்த சம்சாரத்தைக் கடலுக்கு இணையாக பல ஞானிகள் வர்ணித்து இருக்கிறார்கள். கடலுள் செல்லும் மார்க்கத்தில் கைதேர்ந்த மாலுமி செலுத்தினால் ஒழிய அது உரிய இடத்திற்குப் போய்ச் சேராது. அதேபோன்று சம்சாரமாகிய கடலில் ஆசையினாலும் அகந்தையினாலும் செலுத்தப்படும் வாழ்வு எனும் கப்பலை சின்னாபின்னமாக்கி விடாமல் காப்பது ஸத்குருவின் அருள் என்னும் நங்கூரமும், ஆத்ம விசாரம் என்னும் துடுப்பும் ஆகிய கருவிகளேயாம். மாயை என்னும் பெரும்காற்று கப்பலை அலைக்கழிக்கும்போது பகவான் என்னும் மீகாமன் அதைப் பாதுகாப்பாக ஆத்ம சாட்சாத்காரம் என்னும் கரை சேர்க்கின்றான்.*

*"மீகாமன் இல்லாமல் மாகாற்று அலைகலம்*
*ஆகாமல் காத்தருள் அருணாசலா"*

*- (அக்ஷரமணமாலை, 79)*

*பகவானின் இவ் உவமையையே ஒத்துப் பல பாடல்களிலும் அருணகிரிநாதரும் பாடுகிறார்.*

*அருணகிரிநாதர் முருகன் ஆகிய குருநாதனை "சுவர்க்க லோக மீகாமன்" என்று 'அனித்தமான ஊன்' என்று தொடங்கும் பாடலிலும், "யாதும் நிலையற்று அலையும் ஏழுபிறவிக் கடலை ஏறவிடும் நற்கருணை ஓடக் காரன்" என்று திருவேளைக்காரன் வகுப்பிலும் விளிக்கிறார்.*

*இவ்வங்ஙனம் காப்பாற்றுதல் குருநாதனாம் அருணாசலத்தின் கடமை என்கிறார் பகவான்.*

*"முடிஅடி காணா முடிவிடுத்து அனைநேர்*
*முடிவிடக் கடன்இலை அருணாசலா"*

*- (அக்ஷரமணமாலை, 80)*

*அருணாசலா! என் ஆன்மாவும், அகந்தையும் அடிமுடி காணாதவாறு சிக்கல் நிலையில் முடிச்சு ஆக உள்ளன.*

என் சிற்றறிவால் இந்தக் கிரந்தியை அவிழ்க்க முடியாது தவிக்கின்றேன். நீயே எனக்குத் தாய்போல் (அனைநேர்) வந்து அருளி அவிழ்த்து விடிவு தரவேண்டும். அது உன் கடமை அல்லவா! என்கிறார் பகவான்.

உண்மையில் ஆத்மாவானது ஒளிவீசும் சுத்த சைதன்யம் ஆன பரப்பிரம்மத்துடன் அபேதமாய் ஒன்றிவிட முடியாமல் அகந்தையும், தேகாபிமானமும் முடிச்சாகி இந்த ஒன்றாதலைத் தடை செய்கிறது. அகந்தை என்னும் முடிச்சே துக்கங்களுக்குக் காரணமாக உள்ளது. அதனை அவிழ்ப்பதற்கே அவன் அருள் வேண்டும். இந்த மாயா உலகிற்கு அவன்தானே நம்மை அனுப்பி உள்ளான். எனவே இந்தப் பாமரனை பரமனாக்குவதும் அவன் கடமைதானே! ஈன்ற தாய் தன் மகனைக் காத்து உருவாக்குவதற்கு தானே பொறுப்பு வகிக்கிறாள்.

"அ(ன்)னைநேர் முடிவிடுத்து முடிவிடக் கடன்" என்று அருணாசலத்திற்கு அவன் கடமையை நினைவூட்டுகிறார் பகவான்.

ஒன்றும் தெரியாத எனக்கு இவ்வண்ணம் குருவாக இருந்து ஞானத்தினை எனக்குத் தெளிவித்து உன்னில் கரையும் முறையை எனக்குப் பயிற்றுவிப்பாய் என்பது பகவான் நம் சார்பாகச் செய்யும் வேண்டுகோள்.

"மெய்யகத்தின் மனம் மென்மலர் அணையில்நாம்
மெய்கலந்திட வருள் அருணாசலா"

- (அக்ஷரமணமாலை, 82)

மெய்யகம் அல்லது உகம் என்பது ஆலயத்தின் உள்புறத்தைக் குறிக்கும். முருகனார் விவரிப்பதுபோல் "அருணாசலன் அருளால் உயர்ந்த மன அகண்டமான சுத்தப் பெருவெளி ஆதலால், அம்மன மலர் ஒன்றேயும் பிரம்மஸ்வரூபமான அருணாசலனில் அருட்கரைதலுக்கு போதியதான பரந்த ஒரு மலரனை ஆயிற்று.

என்.வி. குணாஜி என்ற பக்தர் பெல்காமிலிருந்து வந்து பகவானைத் தரிசித்து ஆனந்தத்தில் மூழ்கினார். அப்போது

ஞானேஸ்வரர் தம் நூலாகிய 'ஞானேஸ்வரி'யில் தன் குருவுக்காக மராத்தி மொழியில் பாடிய பாடலை மராத்தி மொழியில் பாடி, இதன் பொருளை எனக்குத் தாருங்கள் என்று பிரார்த்தித்தார். அந்தப் பாடல்:

"மஹாதேவ! எனக்கு ஏதாவது மகிழ்வது தர என்று உங்கட்குத் திருவுள்ளம் இருந்தால் நான் வேண்டும் இதைத் தாருங்கள். என்னுடைய அகந்தை ஒழியட்டும்! நினைப்புகள் அகலட்டும்! உலகம் தோன்றாமல் போகட்டும்! என் திருஷ்டி உன்னிலேயே நிலைக்கட்டும்! உலகப் பொருட்களையும், இந்திரிய சுகங்களையோ நாடாத பேரின்பம் எனக்கு வாய்க்கட்டும்! நீரில் உப்பு கரைவதுபோல் நான் உன்னில் கரைய வேண்டும்"

என்று ஞானேஸ்வர் பாடல் மூலம் வேண்டிய குணாஜியின் கண்ணில் நீர்பெருக, பகவானைத் தவிர வேண்டுவதற்கு ஒன்றுமில்லை என உணர்ந்தார்.

பகவான் ஒளிபொருந்திய தோற்றத்துடன் நிமிர்ந்து நின்று, கம்பீரமான குரலில், "எடுத்துக்கோங்கோ! எவ்வளவு வேண்டுமானாலும் எடுத்துக்கோங்கோ! உள்ளே போங்கோ! உள்ளே போங்கோ!" என்றார்.

இதுவே இவ்வண்ணமே நம்மை ஆட்கொள்ளும் உபதேசம்.

மீண்டும் உரையாடலைத் தொடர்வோம்.

பகவான் பணியில் தங்கள்,

ராம் மோஹன்

**ரமணோதயம்**

Voluntary Services

| | |
|---|---|
| K. சுரேஷ் ஜானகிராமன் | 9444127770 |
| ராஜேஷ் M.S. | 9840075778 |



# இனிவரும் திருநாட்கள் 2023

| பூஜை/விழா/பண்டிகை | ஆங்கில தேதி | |
|---|---|---|
| பகவான் 143 ஆவது ஜயந்தி | 07-01-2023 | சனி |
| பொங்கல் | 15-01-2023 | ஞாயிறு |
| சின்னசுவாமிகள் ஆராதனை | 05-02-2023 | ஞாயிறு |
| மகா சிவராத்திரி | 18-02-2023 | சனி |
| சுந்தரம் ஐயர் தினம் | 12-03-2023 | ஞாயிறு |
| ஸ்ரீவித்யா ஹோமம் | 17-03-2023 | வெள்ளி |
| தெலுங்கு வருடப் பிறப்பு | 22-03-2023 | புதன் |
| ஸ்ரீராம நவமி | 30-03-2023 | வியாழன் |
| தமிழ் வருடப் பிறப்பு | 14-04-2023 | வெள்ளி |
| பகவான் 73 ஆவது ஆராதனை | 18-04-2023 | செவ்வாய் |
| மகாபூஜை | 12-06-2023 | திங்கள் |
| பசு லட்சுமி ஆராதனை | 30-06-2023 | வெள்ளி |
| குரு பூர்ணிமா | 03-07-2023 | திங்கள் |
| பகவான் அருணையடைந்த தினம் | 01-09-2023 | வெள்ளி |
| நவராத்திரி விழா தொடக்கம் | 15-10-2023 | ஞாயிறு |
| சரஸ்வதிபூஜை | 23-10-2023 | திங்கள் |
| விஜயதசமி | 24-10-2023 | செவ்வாய் |
| தீபாவளி | 12-11-2023 | ஞாயிறு |
| கார்த்திகை தீபோற்சவம் துவக்கம் | 17-11-2023 | வெள்ளி |
| கார்த்திகை தீபம் | 26-11-2022 | ஞாயிறு |
| பகவான் 144 ஆவது ஜயந்தி | 28-12-2023 | வியாழன் |

# ஔவைக் குறள்

## விளக்கம்: ராம் மோஹன்

### தூய ஒளி காண்டல்

*181:* தோன்றிய தெல்லாம் தொடக்கறுத்துத் தூய்வெளியாய்த்
தோன்றியக் காற்றூய ஒளி.

*பொருள்: மனிதச் சிந்தனையில் ஏராளமான தத்துவங்கள் உதிக்கின்றன. அதன் தொடர்பினால் பல்வேறு எண்ணங்கள் எழுகின்றன. உண்மையான சாதனையினை மட்டுமே நோக்கி இந்தத் தத்துவ ஆராய்ச்சிகள் அனைத்தையுமே விடுத்து, வெறுவெளி போய் ஆழ்மனத்தை ஆக்கி உள்நோக்கும்போது, தூய ஆத்ம ஒளி உதிக்கும்.*

*மனத்துக் கண் தோன்றும் மாசுகளை அறுத்தபின், அஞ்ஞான தத்துவங்கள் அனைத்தின் தொடர்புகளும் அறுபட்டு சிதாகாசத்தில் ஆன்ம ஒளி பிரகாசிக்கும்.*

*விளக்கம்: இதே கருத்தினைத் 'திருமந்திரம்' அழகுற விளக்குகின்றது.*

"உண்டில்லை என்னும் உலகத்து இயல்பிது
பண்டில்லை என்னும் பரங்கதி உண்டுகொல்
கண்டில்லை மானுடர் கண்ட கருத்துறின்
விண்டில்லை உள்ளே விளக்கொளி யாமே."

*(ஒன்பதாம் தந்திரம் - 4-13)*

*பொருள்: உலகுக்குக் காரணம் ஆனவன் ஒருவன் உண்டு என்றும் இல்லை என்றும் சொல்பவர் இவ்வுலகில் உண்டு. ஜீவனுக்குப் போய் பரம் ஒன்று உண்டு என்று கூறுவோர்க்கு மேலான நிலை எய்தக் கூடுமோ (கூடாது). இங்ஙனம் பரபக்தி இருப்பதை மறுப்பவர்கூட ஞானம் பெற வேண்டும் என்ற*

பெருங்கருணையில், பராகாசம் ஆகில் தில்லையில் வந்தோர்க்கு எல்லாம் மனத்தை விளக்கும் ஒளியாக பரமன் ஒளிர்வதைக் காணலாம்.

சுட்டி உணரப்படும் உலகம் உண்டு எனவும், இல்லை என்றும் இடைவிடாது தர்க்கம் செய்து கொண்டு இருக்கும் இவ்வுலகில், உலகில் பெரும்பாலான உயிர்கள் அஞ்ஞான இருளிலேயே மூழ்கி உள்ளன. உலகப் பொருட்களை காண்பதுபோல் திருவருட்பேறு அல்லது முக்தி சுட்டு உணர்வின் மூலம் அறிய ஒண்ணாதது. அப்பேறு இறைவனை ஞானப் பேரொளியாய்க் காண்போர்க்கே கிட்டும்.

*182:* தெளிவாய தேசவிளக் கொளியைக் காணில்
வெளியாய வீடுஅதுவே யாம்.

பொருள்: வெளிச் செல்லும் மனத்தை உள்நோக்கித் திருப்பி இதயத்தில் இடைவீடு இன்றிப் பதித்தால் அஞ்ஞானத் திரை நீக்கப்பட, தெளிவான ஆத்ம தரிசனம் கிடைக்கும். அத்தகைய நிலை பெற்றோர் அண்டத்தில் உள்ள அத்தனையையுமே தெளிவாய் அறிவர்.

விளக்கம்: பகவானின் அக்ஷரமணமாலைப் பாடலிலும் பகவான் இக்கருத்தை விளக்குகிறார்:

"திரும்பி அகந்தனை தினமகக் கண்காண்
தெரியும் என்றனைஎன் அருணாசலா"

இதே கருத்தினை திருமந்திரம் 2682-ஆம் பாடலும் விளக்குகிறது.

"புகல்எளி தாகும் புவனங்கள் எட்டும்
அகல்ஒளி தாய்இரு ள்ஆசற வீசும்
பகல்ஒளி செய்ததும்அத் தாமரை யிலே
இகல்ஒளி செய்துஎம் பிரான்இருந் தானே."

விளக்கம்: இதயத்தே விளங்கும் ஆன்மப் பேரொளியை அறிந்து அதில் நிலைபெற்றோர்க்கு அகிலம் முழுதும் உலவும் ஆற்றல் கைவரப்பெறும்

*அவர் உள்ளத்தே அஞ்ஞான இருள் நீங்கி அகண்ட ஞானஒளி பரவும். அகத்திருள் மட்டும் இன்றி அது புற இருளையும் மாற்ற வல்லது. அது யோகச் சக்கரத்தின் இறுதி நிலையாகிய ஆயிரம் இதழ் தாமரையை மலரச் செய்துவிடும். அவர் இதயத்தே அத்வைத நிலையில் இறைவன் பொருந்தி நிற்பான்.*

*திருக்கோவிலூரில் முதல்முறை ஆழ்வார்கள் சந்திக்கும்போது, முறையே முதல் பாடல் பாட புறத்தருள் நீங்கும். இரண்டாம் பாடலில் அகத்திருள் நீங்கி, மூன்றாம் பாடலில் "திருக்கண்டன் பொன்மேனி கண்டேன்" என்று ஆத்மஜோதி தரிசனம் அடியார்கட்குக் கிடைப்பதை நினைவு கூர்வோம்.*

*183: மின்போல் உருவ விளக்கொளிபோல் மேற்காணில்*
*முன்போல மூலம் புகும்.*

*பொருள்: தலையின் உச்சியின்மேல் த்வாதஸாந்தப் பெருவெளியில் பதினாறு அங்குல அளவில், மின்னலைப் போலவும் சுடரைப்போலவும் ஒளி வெளிப்பட்டு அது உதயம் ஆன சமயத்தில் இருந்ததுபோல் உந்திக் கமலமாம் (தொப்புள்) பிரணவ வீட்டில் திரும்பிவந்து புகுந்துவிடும். அதாவது மூலாதாரத்தில் மூண்ட கனலை ப்ராணாயாமத்தினால் எழுப்பி, சிரத்தின் மேல் கொண்டு வந்து நிறுத்தி, அதன் மூலம் தேகம் முதலிய பௌதிக உறுப்புக்களை ஆய்ந்து, பின் உந்திச் சமயத்தில் மீண்டும் சேர்த்து விடவேண்டும். இதுவே ஔவை முதலாய சித்தர்கள் காட்டும் வழி.*

*184: பளிங்கு வலம்புரி பால்நிகர்த்த தாகில்*
*துளங்குஒளியாம் தூய நெறி.*

*பொருள்: அண்டத்தில் அனைத்தையும் விளக்கிக் காட்டும் ஆன்ம ஒளியானது, மிகத் தூய்மையானதாகவும் படிகம் போன்ற நிறத்தையும, வலம்புரிச் சங்கின் நிறத்தையும், பாலின் நிறத்தையும் ஒத்து, தலை உச்சியில் த்வாதஸாந்தப் பெருவெளியில் ஒளிரும்.*

*விளக்கம்:* இறைவன் விரும்பியிருக்கும் இடங்கள் இரண்டு. ஒன்று இதயத் தாமரை மற்றொன்று துவதசாந்தப் பெருவெளி. அஃதாவது தலைக்குப் பன்னிரெண்டு அங்குலத்துக்கு மேலே உள்ள இடம். இந்த இரண்டு இடங்களில் இறைவனைத் தியானிக்கும்போது பெரும் சக்தி உருவாகும்.

"கரம்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல்கள் வெல்க"
- (திருவாசகம்-சிவபுராணம்)

இதன் யோக நடைமுறையை திருமூலர் விளக்குகிறார்

"ஏரொளி உள்ளெழு தாமரை நாலிதழ்
ஏரொளி விந்துவின் தானெழும் நாதமாம்
ஏரொளி அக்கலை எங்கும் நிறைந்தபின்
ஏரொளிச் சக்கர மந்நடு வன்னியே."

மூலாதாரத்தில் தோன்றுவது நாவிதழத் தாமரை. அதன் உள்ளிருந்து உச்சித்துளை வரை செல்லும் வீணாத் தண்டின் இருபுறமும் 'ஏரொளி' எனப்படும் பிரகாசமான ஒளி வீசும். ஏரொளியின் துணையால் விந்துவின் ஒளிதோன்றும். நாதஒலி கேட்கும். அந்த ஏரொளி எல்லாவிடத்தும் நிறைந்து நிற்கும். அதன் மத்தியில் சுடர் வீசும் சக்கரம் அனல் பிழம்பாய் ஒளி வீசும்.

*185:* **சங்கு நிறம்போல் தவளஒளி காணில்
அங்கையில் நெல்லியே யாகும்.**

*பொருள்:* இங்ஙனம் வெளிப்படும் ஆன்ம ஜோதியைச் சங்கின் நிறம்போலக் கண்டால், மற்றவை அனைத்தும் நம் முயற்சி இல்லாமலேயே உள்ளங்கை நெல்லிக்கனி என விளங்கும்.

*186:* **துளங்கிய தூண்டா விளக்கொளி காணில்
விளங்கிய வீடாம் விரைந்து.**

*பொருள்:* சிரத்தின் உச்சியில் அசைந்து ஆடும் தூண்டாமணி விளக்கின் ஒளியைக் குண்டலினி யோகத்தின் மூலம் கண்டால், மிக விரைவில் ஆன்ம

ஒளி உடலின் ஒவ்வொரு அணுவிலும் பாய்ந்து, அனைத்தையும் விளக்கிக் காட்டும்.

*187: மின்மினி போன்ற விளக்காகத் தான்தோன்றில்*
*அன்னப் பறவையே யாம்.*

பொருள்: சாதனைப் பரிணாமத்தில், மின்மினிபோல் இடை இடையே தோன்றி மறையும் ஆன்ம ஜோதி, ஜீவன் சாதனையில் முழுமை அடைந்து, அன்னப் பறவைபோல் ஸத், அஸத் இரண்டையும் ஞானம் அடைவதே இறுதி நிலை.

*188: உள்ளொளி தோன்றில் உணர்வில் அருளொளி*
*அவ்வொளி ஆதி ஒளி.*

பொருள்: ராஜயோக முறைப்படி, உடலின் மூலத்தை அமைந்திருக்கும் மூல அக்னியை சாதனையால் எழுப்பி, அநத மூல அக்னியே அனைத்துக்கும் ஆதியே என்று உணர்வதே, அருட்பொழிவு. சத்திநிபாதம் அல்லது ஸடோரி என்று திபேத்திய யோக முறையில் கூறப்படுவதும் ஆம்.

*189: பரந்த விசும்பில் பரந்த ஒளிகாணில்*
*பரம்பரமே ஆய ஒளி.*

பொருள்: ('பரம்-பரம்' என்ற கூட்டுச் சொல்லை, பரம்-அபரம் என்று பிரித்துக்கொள்க. இங்கு முற்றிலும் நீத்த துறவு வழியில் மட்டும இன்றி, ஒழுங்கான இல்லற வாழ்விலும் இருந்துகொண்டே ஞானம் பெறலாம் என ஔவையார் கூறுகிறார். இந்தக் கருத்தைப் பலவிடங்களில் பகவான் ரமணரும் கூறி உள்ளார்)

பரமானது ஞான விசாரத்தில் ஈடுபட்டு இறைவனிடம் ஒன்றுவது. அபரமானது இல்வாழ்க்கையில் இருந்து கொண்டே தூய்மையாய் சாதனையில் ஈடுபடுதல். துறவறமான பரவித்யா, தார்மிகமான இல்வாழ்வு இரண்டையும் முழுத் தூய்மையுடன் பின்பற்றும்போது ஆன்மஜோதி எழும்பி சிதாகாசத்தில் ஒளிர்கிறது.

*190: ஆதிஒளியாகி ஆள்வானும் தானாகி*
*ஆதி அவன்உருவு மாம்.*

*பொருள்: சாதகனுடைய மூலாக்னி ஆகி (அல்லது சாதகனுடைய உள்ளிருந்து அதிரும் பிராண அதிர்வாகி) அனைத்துப் பரிமாணங்களையும் ஆள்கின்ற பக்குவப்பட்ட ஜீவன், தூல உடலின் கட்டுக்களில் இருந்து பிரிந்து சுத்த சைதன்யமாய் ஒளிர்கிறது.*

## ஜீவன் முக்தி - விதேக முக்தி

*பானர்ஜி எனும் பக்தர் ரமண மகரிஷிகளைக் கேட்டார், ஜீவன் முக்திக்கும் விதேக முக்திக்கும் வித்தியாசம் என்ன?*

*ரமண மகரிஷிகள்: வித்தியாசம் ஒன்றுமில்லை. உடலுடன் இருக்கும் ஞானி ஜீவன் முக்தன். உடலை விடும்போது அவன் விதேக முக்தி அடைகிறான் என்று சொல்லலாம். ஆனால் இந்த வித்தியாசம் காண்பவருக்குத்தான், ஞானிக்கு அல்ல. உடல் விடுவதற்கு முன்னும் பின்னும் அவன் ஒரு நிலையிலேயே இருக்கிறான். நாம் ஞானியை மனித உருவமாக அல்லது அந்த உருவில் இருப்பவனாகப் பார்க்கிறோம். ஆனால் ஞானி தன்னை ஆன்மா ஒன்றேயான சத்வஸ்து. உள்ளும் புறமும் வியாபித்து, எந்த உருவாலும் வடிவாலும் பந்தப்படாதவன் என்பதை அறிகிறான். பின்வரும் பாடலை பகவான் மேற்கோள் காட்டினார்.*

*தான்இருந்தும் தானாகத் தன்னைத்தான் நான்எவன்*
*யான்இருக்கும் ஸ்தானம் எதுவெனக்கேட் - பானுக்கு*
*யான்எவன் எவ்விடம் யானுளன் என்றமது*
*யீடு பகர். - ஏகான்ம பஞ்சகம், பாடல் 2*

*பொருள்: மது அருந்தியவனுக்குத் தன்மேல் ஆடை உள்ளதா இல்லையா என்ற உணர்வில்லாததுபோல், ஞானிக்கு உடலின் உணர்வே இருக்காது. அது இருந்தாலும் விழுந்து விட்டாலும் வித்தியாசம் ஒன்றுமில்லை.*

*- அனுதினமும் ஸ்ரீ பகவானுடன் நூலிலிருந்து*

# நம்பிக்கையும், முழு அர்ப்பணிப்புமே பக்தி...!

**ஆகுரா**

*அண்ட சராசரங்களை கிடுகிடுக்க வைத்த ஸ்ரீ நரசிம்மர் ஒரு வேடனிடம் கட்டுண்ட கதை!!*

சோழவள நாட்டில், அழகிய காவிரிக் கரையோரத்தில் அமைதி நிறைந்த சூழலில் ஒரு குருகுலம். சுற்றி அமர்ந்திருந்த சீடர்களிடம், அன்று நடந்த நிகழ்வை இன்று நடப்பது போன்று தத்ரூபமாக பக்த பிரகலாதனின் கதையை விவரித்துக் கொண்டிருந்தார் குருநாதர். தூணைப் பிளந்து கொண்டு விஷ்ணுவின் நான்காவது அவதாரமான நரசிம்ம மூர்த்தி ஆக்ரோஷத்துடன் வெளிப்படுகிறார். பிரகலாதன் பக்திப் பரவசத்துடன் “நாராயணா நாராயணா” என்று துதிக்க, இரணியனை சம்ஹாரம் செய்கிறார் நரசிம்மர். குருவானவர் நரசிம்ம மஹிமையை வர்ணிக்க வர்ணிக்க அங்கு அமர்ந்திருந்த சிஷ்யன் சனந்தனரின் கண்கள் பனித்தன. தானும் அந்த நரசிம்ம மூர்த்தியைக் காண வேண்டும், நேரில் தரிசிக்க வேண்டும் என்று வேட்கையுடன் குருவிடம் வேண்டினார். குரு அங்கிருந்த அனைவருக்கும் ஸ்ரீ நரசிம்ம ராஜபத ஸ்தோத்திரத்தை உபதேசிக்கிறார். இந்த ஸ்தோத்திரம் மகிமை வாய்ந்தது. குருவானவர் சீடன் சனந்தனரிடம், “இம்மந்திரத்தை சிரத்தையோடு பூரண சரணாகதி செய்து உச்சரித்து தவம் இயற்றினால் நரசிம்ம தரிசனம் கிடைக்கும்”, என்று ஆசீர்வதித்து வழி அனுப்புகிறார். சனந்தனர் தீவிர தவமியற்ற இடம் தேடி அலைந்தார். ஒரு காட்டில் ஏகாந்தமான ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து, குரு உபதேசித்த ஸ்ரீ நரசிம்ம

மந்திரத்தை உச்சரித்த வண்ணம் தவம் இயற்றலானார். இவ்வாறு நாட்கள் கடக்க ஒருநாள் அவ்வழியே ஒரு வேடன் வந்தான். நடுக்காட்டில் தனியாக தவம் இருந்த சனந்தனரிடம், "சாமி! எதுக்கு இங்கே வந்து கண்ணைப் பொத்திகிட்டு உட்கார்ந்திருக்கே? உனக்கு வீடு வாசல் இல்லையா? உன்னைப் பார்த்தா பாவமா இருக்கே..." என்றான். சனந்தனர், "என்னைத் தொந்தரவு செய்யாதே... நான் தியானத்தில் இருக்கிறேன். அதெல்லாம் சொன்னால் உனக்குப் புரியாது" என்று அவன் கேள்விக்குச் சரியான பதில் கூறாது தட்டிக்கழித்தார். வேடன் விடாப்பிடியாக, "சாமி இந்தக் காடு மிகவும் மோசமானது. கொடிய விலங்குகள் நடமாட்டம் அதிகம். உனக்கு இங்கு என்ன வேண்டும்? சொல் எதுவானாலும் சரி நான் உதவி செய்கிறேன்" என்றான்.

"நான் நரசிம்ம பிரபுவைத் தரிசிக்க வேண்டி தவமிருக்கிறேன். சிங்க முகம் மனித உடல் கொண்ட உருவம். உனக்கு அது விளங்காது" என்றார் சனந்தனர்.

"சாமி நீ சொல்ற மாதிரி அப்படி ஒரு உருவத்தை இந்தக் காட்டில் நான் பார்த்ததே கிடையாது. இந்தக் காடு நான் பிறந்து வளர்ந்த இடம். இங்கு எனக்குத் தெரியாத மிருகமே இல்லை. ஏன் உனது நேரத்தை வீணடிக்கிற? கொடிய விலங்குகளின் அட்டகாசம் வேறு. உன் வீட்டிற்குப் போய் விடு," என்று வேடன் கரிசனத்துடன் கூறினான். சனந்தனரோ, "இல்லை என் தவவலிமையால் நான் ஸ்ரீ நரசிம்ம தரிசனம் கிடைக்கப் பெறாது இங்கிருந்து போக மாட்டேன்," என்றார்.

"இந்தக் காட்டைப் பற்றிய எனது அனுபவ அறிவு ஏற்க மறுத்தாலும், சாமி நீ கூறுவதை சத்யம் என்று ஏற்கிறேன். இன்றைய பொழுது சாயும் முன் அதை புடிச்சுட்டு வந்துடுறேன். அப்படி முடியலேன்னா எனது உயிரை மாய்த்துக் கொள்கிறேன்" என்ற வேடனைப் பரிதாபமாகப் பார்த்தார் சனந்தனர். "இவனுக்கு எங்கே



கிடைக்கப் போகிறது", என்று தனது தவ வலிமையின் செருக்குடன் எண்ணிக்கொண்டார்.

வேடனின் எண்ணமெல்லாம் நரசிம்மத்தின் மேல் இருந்தது. அந்த ஸ்ரீ நரசிம்ம உருவம் மட்டுமே அவனுக்கு ஏகாக்கிரகம் ஆனது. அவன் காட்டில் கடுமையாகத் தேடி அலைந்தான். இதுவரை அவன் நுழையாத அடர்ந்த பகுதிகளில் எல்லாம் புகுந்தான். பசி தாகம் மறந்தான். பொழுது சாய்ந்து சூரியன் வானில் மறையத் துவங்கினான். வேடனின் முகத்தில் சொல்லமுடியாத வேதனை. தன் இயலாமையை உணரத் தொடங்கினான். அருகில் கிடந்த காட்டுக் கொடிகளை உருவி தன் கழுத்தைச் சுற்றி இறுக்கினான். தன் உயிரை மாய்த்துக் கொள்ளத் துணிந்தான். அந்த க்ஷணத்தில் கருணா மூர்த்தியான ஸ்ரீ நரசிம்மர் அங்குத் தோன்றி வேடனுக்குக் காட்சி அளித்தார்.

"ஆகா! மாட்டிகிட்டியா!" என்று குதூகலமடைந்த வேடன், தூக்கிலிட இருந்த அதே காட்டுக் கொடிகளைக் கொண்டு அவரை இறுகப் பிணைத்தான். வேதாந்திகளுக்கும், தபஸ்விகளுக்கும் கட்டுப்படாத அந்தப் பரம்பொருள் அந்த எளிய வேடனின் கட்டுக்குப் பணிந்து நின்றது.

ஸ்ரீ நரசிம்மத்தை இழுத்துக்கொண்டு சனந்தனர் முன்னால் வந்தான், "சாமி இதோ பாருங்க, இதுதானே நீர் கேட்ட மிருகம்" என்றான் வேடன்.

அந்தோ, சனந்தனர் கண்ணுக்கு ஸ்ரீ நரசிம்மர் தெரியவில்லை. வேடனின் கையிலிருந்த காட்டுக் கொடிகள் மட்டும் அந்தரத்தில் சுற்றிக் கொண்டு நிற்பதுதான் தெரிந்தது.

"அடேய்! பைத்தியமே... அவன் என் அரிய தவத்திற்கே வர மறுக்கிறான். உன்னிடமா சிக்குவான்? வெறும் கொடிகளைக் காட்டி நரசிம்மம் என்கிறாய்?" என்றபடி ஏளனமாய்ச் சிரித்தார்.

"இல்லே. சாமி... இதோ இந்தக் கட்டுல இருக்குது அது... நல்லா பாருங்க..." வேடன் கூறுகிறான். உடனே ஸ்ரீ நரசிம்மரின் கர்ச்சனை வெளிப்பட்டது.

அந்த உறுமல் சத்தம் சனந்தனரை உலுக்கியது. "பிரபோ, என் தவத்திற்கு ஏன் உங்கள் தரிசனம் கிடைக்கவில்லை? எப்படி இந்த எளிய வேடனுக்குக் காட்சி கிடைத்தது?" என்று கண்ணீர் மல்கினார்.

அப்போது ஒரு அசரீரி கேட்டது, "சனந்தனா! வேடன் என்னை அடைந்தே தீர வேண்டும் என ஒரே குறிக்கோளுடன் நம்பிக்கையுடன் அலைந்தான். பிரம்மன் கூட இவ்வளவு ஒரே சிந்தனையுடன் முயற்சிக்கவில்லை. அதிகக் கல்வியறிவு இல்லாத வேடன் என்னைக் காணாமல் உயிரையும் விடத் துணிந்தான். நீயோ, அலைபாயும் மனதுடன் நான் வருவேனோ மாட்டேனோ என்ற சந்தேகத்துடன் தவமிருந்தாய். தவிர ஆணவமும் கொண்டாய்... வருங்காலத்தில் உன் எதிர்கால குருவின் தேவையை ஒட்டி உனக்கு என் காட்சி கிடைக்கும். கவலைப்படாதே என்று கூறியபடி மறைந்து விட்டார்.

பிற்காலத்தில் ஆதிசங்கரரின் முதல் மாணாக்கன் ஆனவர் சனந்தனர். பிற்காலத்தே ஆதிசங்கரரை ஒரு

*கபால பைரவனிடமிருந்து காப்பாற்றும் முயற்சியில் ஸ்ரீ நரசிம்ம மூர்த்தியின் தரிசனம் சனந்தனருக்குக் (பத்மபாதர்) கிடைக்கிறது என்பது ஒரு சம்பவம்.*

*இவ்வேடனின் நிகழ்வு ஆன்மிக அன்பர்களுக்கு ஒரு முக்கியமான முன் உதாரணம் ஆகும். வேடனுக்கு சுட்டறிவு - அந்தக் காட்டில் ஸ்ரீ நரசிம்ம உருவம் கிடையவே கிடையாது என்பது. எனினும் அந்த அறிவை விலக்கி, சாதுவானவர் கூறிய கூற்றில் சத்தியம் உள்ளதாக நம்புகிறான். நம்புவதுடன் அதே சிந்தனையுடன் பசி தாகம் மறந்து சிரத்தையுடன் முயல்கிறான். இம்முயற்சியின் இறுதியில் தோல்வி அடைகிறான். தனது முன்பு கொண்ட நம்பிக்கையான காட்டில் அந்த உருவம் கிடையாது என்பதைத் தனக்கு சாதகமாகக் கொள்ளாது, சத்திய வஸ்துவின் மீது நம்பிக்கை கொண்டு, அதை அடைய முடியாத மாத்திரத்தில் தன்னையே மாய்த்துக் கொள்ளவும் துணிகிறான். தன் சுட்டறிவு, முயற்சி இரண்டையும் சரணடையச் செய்வித்து நிர்க்கதியாக நிற்கும்போது, சத்யவஸ்துவானது அவனுக்கு வெளிப்படுகிறது. நமக்கு இந்த உலகம் சத்தியமாகப் படுகிறது. "நீதான் அந்த சத்ய வஸ்து, உலகம் மாயை" என்று குருவினால் கூறப்பட்டாலும், நாம் அதை ஏற்றுக் கொண்டாலும், அதைப் பயிற்சி செய்வதில்லை. குருவாக்கில் நம்பிக்கை வைத்து சிரத்தையுடன் முயல்வதில்லை. நமது சுட்டறிவு, முயற்சி ஆகியவற்றை (நமது அகங்காரத்தை) குருவிடம் பூரண சரணடையவித்தால் நம்முள் அந்த உள்ள பொருள் உணரப்படும். வேடன் சனந்தனரின் நிகழ்வு நமது ஆன்ம நாட்டத்திற்கு ஒரு திறவுகோல்.*

*அகங்கார ஓசை அடங்கும் இடத்தே தன் முகம் காணத் தோற்றும் அதி மோகன மெய்யோன் அருணாசல ரமணனின் தத்துவம் இதுவே.*

## சனந்தனர் பத்மபாதர் ஆன கதை



*ஆதிசங்கரரின் சீடர்களில் முதன்மையானவர் சனந்தனர். கங்கை ஆற்றின் ஓரம் ஒரு முறை ஆதிசங்கரர் நின்று கொண்டிருக்கையில் கரையின் அந்தப் பக்கம் பத்மபாதர் நிற்பதைக் காண்கிறார். தனது சீடனை ஒரு காரியமாக உடனே வா என்று அழைக்கிறார்.*

*குருநாதர் அழைக்கிறாரே என்று எதைப் பற்றியும் கவலைப்படாது அப்படியே கரைபுரளும் கங்கை ஆற்றின் மீது கால் வைத்து நீர் மேல் நடக்க ஆரம்பித்துவிட்டார் சனந்தனர். நீர் எள்ளளவும் கால் மேல் படாமல் கரையைக் கடந்து குருவிடம் வந்துவிட்டார். அவரின் குரு பக்திக்கு மயங்கிய கங்கை அன்னை அவர் பாதங்கள் பட்ட இடமனைத்திலும் ஒவ்வொரு தாமரை மலரை மலரச் செய்து தாங்கச் செய்தாள். அதன் மீது நடந்து வந்துவிட்டார் சனந்தனர். பிறகு தான் தெரிந்தது தான் தாமரை பூக்கள் மீது நடந்து வந்தது. எல்லாம் குருநாதரின் மகிமை என்று மெய்சிலிர்த்து ஆதிசங்கரரின் கால்களில் விழுந்தார். அது முதல் தான் அவருக்கு 'பத்மபாதர்' என்று ஆதி சங்கர குருவால் நாமகரணம் செய்விக்கப்பட்டது.*

*பத்மபாதர் அல்லது பத்மபாதாச்சாரியார், பண்டைய நாட்களில் இந்தியாவில் வாழ்ந்தவர் எனக் கூறப்படுகிறது. ஆதிசங்கரரின் நான்கு முக்கிய சீடர்களில் முதல்வர். மற்ற சீடர்கள், சுரேஸ்வரர், தோடகர், ஹஸ்தாமலகர் ஆவர். பத்மபாதர் பூரி நகரத்தின் கோவர்தன பீடத்தின் முதல் மடாதிபதியாக விளங்கியவர். ஆதிசங்கரரின் "பிரம்ம சூத்திர" விளக்கத்திற்கு, பத்மபாதர் "பஞ்சபாதிகா" எனும் விரிவான விளக்க உரை நூல் எழுதியுள்ளார்.*

# பேரமைதி நிலவிய பெருநாட்கள்

## மூலம்: மௌனி சாது

## தமிழாக்கம்: ராம்மோஹன்

### 27. உதிர்ந்த மலர்கள்

நான் ஆஸ்ரமத்தில் தங்கியிருந்த நாட்களில் வெவ்வேறு சமயங்களில் என் மனம், அனுபவத்தில் கண்ட பல்வேறு எண்ண ஓட்டங்களை இந்தப் பகுதியில் வரைந்துள்ளேன். கிட்டத்தட்ட ஓராண்டு கழித்து இவற்றை மீண்டும் படிக்கும்போது என் மனத்தில் எங்ஙனம் ஓராண்டில் பெரு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பதை அறிகிறேன். இந்த வெவ்வேறு அனுபவங்களை இங்கு ஒன்றாகத் தொகுத்து அளித்துள்ளேன்.

நான் முன்பே கூறியபடி, உலகைப் பற்றிய மனிதரைப் பற்றியும் என் முழு நோக்கும் முற்றிலும் மாறுபட்டுள்ளதை காண்கிறேன். ஆயினும் இந்த மாற்றங்கள் அனைத்தும் வெளி உந்துதல் இன்றி தாமாகவே நிகழ்ந்துள்ளன. முதலாவதாக சில நிகழ்வுகளின் வேறு எனது எண்ண ஓட்டம் முன்பு முற்றிலும் மாறுபட்ட ஒன்றாக இருந்தது என்பதைக் காண்கிறேன். இப்போதோ அதே சூழ்நிலை இருந்த போதும், எனது எண்ணப் பாங்கு முற்றிலும் மாறுபட்டதாக உள்ளது. என்னுடைய மனப்பாங்கும் வேறுபட்ட வெவ்வேறு போக்குகளை ஒன்றிணைக்கும் நோக்கமே இப்போது பிரதானமாக உள்ளது. எந்த நிகழ்வுகளையும் எனது தனிப்பட்ட தாக்கம் ஏதுமின்றி, உண்மையிலேயே அது எப்படி உள்ளதோ அப்படியே

நோக்க வேண்டும்; அதன் மெய்ம்மை உருவை அறிய வேண்டும் என்பதே என் நோக்கில் உள்ளது. அத்தகு மனப் பரிமாணத்தை முற்றிலும் அடைய வேண்டும் என்பதே என் நோக்கமாக இப்போது உள்ளது. வெறும் மனோ தத்துவ ஆய்வுகளின் மூலம் அத்தகு உயர்நிலையை அடைய இயலாது என்பதை நான் அறிவேன். ஏனெனில் வெறும் தத்துவ ஆராய்ச்சிகளில் முன்பே பலமுறை ஈடுபட்டு அவை பயனற்றவை என்பதை நான் அறிந்துள்ளேன். மாறுபட்ட கருத்துக்களை ஒருங்கிணைக்கும் இத்தேடல் மிகவும் வலி மிகுந்த தேடலாக அமையும் என்பதையும், இதன் மூலம் என் உள்ளத்தில் குடிகொண்டுள்ள பல்வேறு தீவிர முரண்பாடுகள் ஆஸ்ரமத்தைத் தவிர வேறு எங்கு இருந்தாலும் வெளியே பீறிட்டு வரும் என்பதையும் நான் அறிவேன். பகவானின் சந்நிதியில் இந்த அறிவு சார்ந்த வித்தைகள் அனைத்தும் முடிவுறுகின்றன. இங்கே, சாதகனின் தேடுதல் சத்தியத்திலேயே ஆழ்ந்து வேர் கொள்ளுகிறது.

பகவான் சந்நிதியில் சமயம் சார்ந்த பாரபட்சங்களும் அமானுஷ்ய கோட்பாடுகளும் தாமாகவே உதிர்ந்து விடுகின்றன. ஆத்மாவை மறைத்துள்ள எண்ணங்கள் தாமாகவே விலகுகின்றன. பழைய பொருளற்ற பழக்கங்கள் உதிர்ந்து விடுகின்றன. முன்பெல்லாம் நான் ஏசு கிறிஸ்துவின் சந்நிதிக்கு செல்லும்போது, என் மனம் சிவபெருமானை விட்டு விலகுகிறது. புத்த பிரானுக்கு அங்கு இடமில்லை. இங்கு வந்த சில காலத்திற்குள் பகவானின் தோற்றமே அனைத்திலும் குடி கொண்டது. இங்ஙனம் அனைத்திலும் பகவானையே காண்பது சில காலம் நீடித்தது. இத்தருணங்களில் என் மனதில் ஆழ்ந்த அமைதி நிலவியது. இது ஒரு மிக நுட்பமான, பொருண்மை கடந்த நிலைக்கு ஏறும் படிக் கட்டுகளாக இருக்கலாம்.

இந்தக் காலகட்டம் முடிவுற்ற பின்னர், எனது மனதில் இதுகாறும் இருந்த முரண்பாடுகள் ஒழிந்து

ஆத்ம சாதனை வெற்றி பெறுவதற்குத் தடைக் கல்லாக இருந்த அத்தனையும் நீக்கப்பட்டன. இந்தத் தருணங்களில் அங்கேயும் ஆஸ்ரமத்தில் அனுபவிப்பது போன்ற எல்லையற்ற அமைதியை அனுபவித்தேன். ஒருவரது அஹங்காரம் சார்ந்த தளைகளிலிருந்து விடுபட பேருதவி கிடைக்கிறது.

இங்கு எழும் முதல் மனநிலையின் வண்ணம் ஓர் அறிமுகம்போல் அமைகிறது. இதிலிருந்து மேம்பட்ட ஆன்மிக அனுபவங்கள் கிளைத்தெழுகின்றன. எனினும் இவை தொடக்கத்தில் எண்ணம் சார்ந்தவைகளாகவே உள்ளன. இந்த எண்ணப் பிணைப்பு எழும்போது, பரம்பொருளுடன் நாம் அனுபவிக்கும் ஒற்றுமை. எனவே தான் பகவான் எல்லாப் பாதைகளும் ஒரே குறிக்கோளுக்கே அழைத்துச் செல்கிறது” என்று கூறுகிறார்.

அமைதிப் பெருங்கடலில் நாம் மூழ்கி இருக்கும்போது, அந்த உயர் அனுபவத்தை எங்ஙனம் வார்த்தைகளால் விவரிக்க முடியும்? நமது அனுபவங்களில் ஏற்படும் பல்வேறு மாறுபாடுகளை எங்ஙனம் வார்த்தைகளில் வடிப்பது? உதாரணமாக, ஒருவன் எதிர்பாராவிதமாக படைப்பின் அனைத்து உருவாக்கங்களும் அடிப்படையில் ஒன்றானவையே என உணர்ந்து அப்போது இறப்பு என்பதே ஒரு அர்த்தமற்ற எண்ணமாகிறது. இங்ஙனம் நமது தனிப்பட்ட நிலையை நீக்கி, பரமாத்மாவுடன் ஒன்றும்போது ஓர் அளவற்ற ஆனந்தம் உள்ளே பொங்கி, ஏசு பின் மரித்தெழுதலை நினைவூட்டுகிறது.

அர்த்தம் பொதிந்த வாழ்வை நடத்தும் ஒரேவழி, ‘நான் ஒரு தனிப்பட்ட பௌதிக உருவம்’ என்பது ஒரு மாயை என்பதை உணர்தலே என்று உடனே அறிந்தேன். வாழ்வில் ஏற்படும் எல்லா மாற்றங்களுமே, முக்கியமாக ப்ரக்ஞை உணர்வை – உடல்மனம் அளவாகக் குறுக்கிக் கொள்ளல் – அனைத்துமே பொய்ம்மை ஆனவையே. எனவே இத்தகைய உடலளவான குறுக்கில் மாயையினால்

*ஏற்படும் மயக்கத்திலிருந்து விழித்தெழவைக்கும் பெரிய வலியாய் வருகிறது. அத்தகு வலி வந்தால் நாம் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்து விழிக்கிறோம் அல்லவா?*

*இதிலிருந்து, நாம் பற்று மற்றும் ஆசையுடன் செய்யும் எல்லாச் செயல்களுமே, புதிய புதிய சங்கிலிகளால் நம்மைக் கட்டுகின்றன. என்றும் மறுக்க முடியாத உண்மையை நமக்கு உணர்த்துகிறது. அதிலிருந்து புதிய வலிகள் உருவாகின்றன. பார்க்கப்போனால், 'அத்தியாவசிய தேவை' என்றோ, எதிர்காலத்தைக் குறித்த அச்சங்களின் தொகுப்போ, பல்வேறு நாடுகள், இவைகளைக் குறித்த வேறுபாடுகளோ அனைத்துமே ஒரு பயனற்ற வேலை. 'நான் யார்?' என்பதை விசாரித்து அறிவதே நாம் அனைவரும் இந்த அகிலம் அனைத்தையும் நிர்மாணித்து வழி நடத்தும் ஒரு மஹா சிற்பியின் கையில் பற்றப்பட்டு, அவன் வகுக்கும் திட்டத்தின்படி செயலாற்றுபவர்களே. நமக்கு முடிவெடுத்து செயலாற்றும் சுதந்திரம் உள்ளது என்று எண்ணுவதே ஒரு மாயைதான். நாம் 'நாம்' என்று சுட்டும்போது, நமது தனித்துவம், தனிப்பட்ட ஆளுமை, மனப்பாங்கு அனைத்தும் சேர்ந்த ஒரு தொகுப்பாகவே சுட்டுகிறோம். மெய்ம்மையான 'நான்' என்பதை நாம் அறியும்போது நாமும் நமது கர்த்தாவும் ஒன்றே என்பதை அறிகிறோம். ஆனால் இந்தப் பரிணாமப் பாதையில் எத்தனை படிகளும் நிலைகளும் உள்ளன? முக்தி நிலைக்குமுன் எத்தனை 'தீட்சை'களை நாம் பெறவேண்டும்?*

**ரமணோதய அன்பர்களுக்கு**
**ஓர் அன்பான வேண்டுகோள்**

ரமணோதய சந்தா புதுப்பிக்காதவர்கள் தயவுசெய்து தங்களது சந்தாவை புதுப்பிக்கவோ அல்லது ஆயுள் சந்தாவாகச் செலுத்தவோ செய்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

# என்.ஆர்.கே.

***(1)***

## வி.நிரஞ்சன்

*"யானாகிய என்னை விழுங்கி வெறும்*
*தானாய் நின்றது பராபரமே"*

*"விசார மணி மாலை"யின் மங்களாசரணத்தில் பகவானின் அருணகிரியார் அனுபூதி மேற்கோள்.*

*"எது சுகம் நித்யம் ஒளி விபு பெயர் உரு ஆதாரம்*
*அது அகம் மதி மதியா மதி அமலம் அபாரம்"*

*"விசார மணி மாலை"யில் பகவானது தலைப்புச் செய்யுள்.*

*என்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 1920, 30 மற்றும் 40களில் பகவானோடு பக்தி சிரத்தையோடு உறவுகொண்டு தனது ஆன்மீக சாதனையில் பகவானது கருணையையும் அருளையும் பூரணமாகப் பெற்றவர். பழம்பிறவியில் செய்த நற்கருமங்களாலும், இறை பக்தியாலும், பரிபக்குவம் அடைந்த நிலையில் தன்னைத் தனது சொருபத்தில் இரண்டறக் கலந்துவிட அருள் பாலிக்கும் பகவானை அடைந்தவர். எந்த ஒரு ஜீவன் இறை பக்தியிலோ சொருப பக்தியிலோ ஈடுபடத் துவங்குகின்றதோ அக்கணத்தில் இருந்தே இறைவனும் சொருபமுமாயும், இரண்டு அற்று விளங்கும் குரு அருள் அந்த ஜீவனை விடாது பற்றி சத் சித் ஆனந்த சொருபத்தில் ஐக்கியப்படுத்திவிடும் என்பதை விளக்கும் முகமாகிறது இந்தக் கட்டுரை.*

*என்.ஆர்.கே. 1914ல் விருபாக்ஷக் குகையில் பகவானைக் காண்கின்றார். அப்போது அவருக்கு வயது 16. திருப்பதிக்குச் சென்று திரும்பும் வழியில் அவரது குடும்பத்தினர் திருவண்ணாமலைக்கு வருகின்றனர். தனது வயது ஒத்த பிள்ளைகளுடன் என்.ஆர்.கே. சேர்ந்துகொண்டு விருபாக்ஷ குகைக்கு வருகின்றார். பகவானது அருட் கண்ணோக்கு அவர் மீது பதிந்தது. ஆனால் அவரோ இளம் பிள்ளை. அதனைக் கவனியாது இங்கும் அங்குமாய் பிற பிள்ளைகளோடு சேர்ந்து விளையாடுவதில் மனம் வயப்பட்டார்.*

*அவர்கள் வாழ்ந்து வந்த திருச்சிக்குத் திரும்பி வந்த சில நாட்களிலேயே அவருடைய மனதில் ஒரு பெரிய மாற்றம் நிகழ்ந்திருந்தது. அதுவரை அவர் கோயில்களுக்குத் தானாக ஈடுபாடு கொண்டு போயிராதவர். அப்படிப் பட்டவர் திருச்சி மலைக்கோட்டையில் விளங்கும் மாத்ருபூதேஸ்வர லிங்கத்தின் பால் இனம் புரியாத ஈர்ப்பு சதியால் வலிந்து இழுக்கப்பட்டார். ஒவ்வொரு மாலையும் அவர் லிங்கத்தின் சன்னிதிக்கு வந்து விடுவார். சன்னிதியில் ஓர் பேரமைதி அவரை ஆட்கொள்ளும்; சொல்லொணா ஆனந்தம் விளையும்.*

*பின்னர் கல்லூரிப் படிப்பு துவங்கியது. அங்கும் அவரது மனம் ஓர் அசாதாரண விளைவை உண்டாகியது. ஆங்கிலக் கட்டுரை எழுதும் வகுப்பில் தாளில் கட்டுரைக்கு உரிய தலைப்பை எழுதுவார். அதன் பின் அவரது மனதில் எதையும் சிந்திக்க இயலாதவரானர். ஒரு மணி நேரம் வகுப்பில் மனச் சலனம் முற்றும் அற்று கல்லாய் உட்கார்ந்து இருந்துவிட்டு வகுப்பு முடியும் பொழுது வெற்றுத் தாளை ஆசிரியரிடம் கொடுத்துவிட்டுச் செல்வார். ஓர் இரு வாக்கியங்கள் கூட எழுதி இருக்கமாட்டார். மனதின் செயல் இழக்கும் குறைபாட்டையும் விஞ்சியே அவர் கல்லூரியின் இடைநிலை வகுப்புத் தேர்வில் தேர்ச்சி பெற்றார். இது ஓர் ஆச்சரியமாயிற்று.*


என்.ஆர்.கே.

அதன் பிறகு பி.ஏ. ஆனர்ஸ் பட்டப் படிப்பை இயற்பியலில் துவங்கினார். ஆங்கில இலக்கியம் கற்கவேண்டும் என நினைத்ததாகவும் அதற்கு சுயமாக சிந்திக்கும் ஆற்றல் வேண்டும் என்றும் தனது மனம் சுய சிந்தனைக்கு ஆற்றாது செயல் இழந்து விடுகிறது என்றும் உணர்ந்ததால் இலக்கியப்படிப்பை விட்டு விட்டு இயற்பியல் படிப்பை மேற்கொண்டார். விஞ்ஞானப் பாடத்திற்கு புத்தகங்களைப் படித்தால் போதும் சிந்திக்க வேண்டாம் என நினைத்தார். அங்கும் அவருக்கு சிக்கல் உண்டானது. புத்தகங்களை எடுத்துப் படிக்க ஆரம்பித்த உடன் அவரது மூளையில் வலி உண்டாகிவிடும். தாங்கொணாத வலியில், இருந்து நிவாரணம் பெற கண்ணை மூடிக்கொண்டு நீண்ட நேரம் வெறுமே அசைவற்றுப் படுத்துக் கிடப்பார்.

இந்தக் காலகட்டத்தில் திருவண்ணாமலையில் வாழ்ந்து வரும் தனது சகோதரியின் இல்லத்திற்கு வருகின்றார். காலை வந்த உடனேயே கந்தாசிரமத்தில் இருக்கும் பகவானைப் பார்க்கச் செல்கின்றார். இம்முறை பகவானின் அருட்பார்வை அவரது உள்ளத்தில் பதிந்தது. வீட்டிற்கு வந்தவர் காலைச் சிற்றுண்டிக்குப் பின்னர் படுத்து உறங்கலானார். அது சாதாரண உறக்கம் இல்லை. இரண்டு மணி நேரம் அவர் முழு உணர்வோடு இருந்தார். ஆனால் உடல் மற்றும் சுற்றுப்புறம் முழுவதும் உணர்வு அற்றுப் போயிருந்தது. வெகு சிரமப்பட்டு அவர் எழுப்பப்பட்டார். அப்போதும் கூட வெளி உலக உணர்வைத் தெளிவாய் அறிய இயலாமல் திகைத்துப் போனார். இது குறித்து அவரது உறவினர்கள் அவரைக் கேலி செய்தனர்.

இதன் பின்னர் கல்லூரிப் படிப்பில் ஈடுபடும் சக்தியைப் பெறுகின்றார். இருந்தும் மூன்று ஆண்டுகளில் முடிக்கவேண்டிய படிப்பினை நான்கு ஆண்டுகளுக்கு நீட்டித்து அவரது பாடத்தில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் இரண்டாவது மாணவனாகத் தேர்ச்சி அடைகின்றார். 1922ல் மதுரையில் இருக்கும் அமெரிக்கன் கல்லூரியில் துணைப்பேராசிரியராகப் பணியைத் துவங்கி, நிறைவாக பன்னிரண்டு ஆண்டுகள் துறைத் தலைவராகவும் இயங்கி, 1955ல் ஓய்வு பெற்றார்

ஆண்டு 1922. பகவானின் அருளால் அன்னையார் பரத்துடன் ஐக்கியமானார். அவரது சமாதி மலை அடிவாரத்தில் அமைந்தது. கந்தாசிரமத்தில் இருந்து பகவானும் கீழ் இறங்கி வந்து அன்னையாரின் சமாதியின் அருகில் இருந்து வரலானார். எங்கும் காடாகக் காட்சி அளித்த காலம். கற்றாழைகளும் முற்புதர்களும் மேலும் பல விதமான செடிகளும் கொடிகளும் அடர்த்தியாக வளர்ந்து கிடந்தன. அன்னையாரின் சமாதியின் மீது தட்டி மட்டும் வேயப்பட்டு இருந்தது. அருகில் பகவான் ஒரு பெஞ்சில் அமர்ந்து இருப்பார். வெற்று வெளியில்தான் எளிமையான சமையல். வெற்று வெளியில்தான் தரையில் இலையை இட்டுச் சாபிட்ட காலம் அது. ஏழ்மையின் உருவகமாய்த் தோன்றிய அந்த இடத்தில் சச்சிதானந்த ஆன்ம சொருபமே உரு வடிவாய் காணற்கு எளிதாய் வீற்றிருந்தது.

ஆனால் என்.ஆர்.கேயோ பகவானை வெளி முகமாகப் பார்த்திருந்தனரே அன்றி அவரது குரு உருவை இன்னும் தரிசித்தாரில்லை. அதற்கான தருணம் வந்தது. பகவானது சன்னிதியில் நான் என்று அவர் பாராட்டித் தேக்கி வைத்திருக்கும் அடையாளங்கள் கணத்தே மறைந்தன. பகவானின் கிருபா ஆனந்த சாகரத்தில் திளைக்கும் அனுபவம் பெற்றனர். அதனை அறிவோம்.



என்.ஆர்.கே. அந்தக் காலத்தில் பௌதிகத்துறையின் ஆசிரியர் என்கின்ற முறையில் வியக்கத் தகு விஞ்ஞானக் கொள்கைகளையும் விளக்கங்களையும் அறிந்து வைத்திருந்தனர். அது மட்டும் அல்லாது இந்திய தேசிய விடுதலைக்குப் போராடுவதும் மக்கள் மேம்பாட்டுக்குப் பாடுபடுவதுமே ஒருவனது குறிக்கோளாக இருக்க வேண்டும் என்றும் வலுவாக நம்பினார். சமூக நீரோட்டத்தில் கலந்துகொள்ளாது கருமத்தைத் துறந்து தெய்வீகத்திலோ ஆன்மீகத்திலோ ஈடுபட்டுத் தனித்து இருப்பவர்களை அவர் சாடினார். அவர்களால் மக்களுக்குப் பலன் ஏதும் இல்லை என்பது அவரது வாதம். அப்படி ஒதுங்குபவர்களிடம் அவர் சொற்போர் தொடுக்கவும் செய்தார். இப்படிப்பட்ட மனநிலையில் அண்ணாமலை வந்த அவர் முதலில் தரிசித்தது காவியகண்ட கணபதி முனிவரை.

சமஸ்கிருத மொழியின் இலக்கியங்களிலும் சாஸ்திரங்களிலும் முனியின் புலமை ஒப்புயர்வு அற்றதாக இருந்தது. சமஸ்கிருதத்தில் மிகச் சிறப்பாகப் பேசவும்

கவிதைகள் இயற்றவும் வல்லவர் அவர். மகேந்திர சங்கம் என்னும் அமைப்பை நிறுவி, நாடு முழுதும் பத்தாயிரக் கணக்கில் உறுப்பினர்களைக் கூட்டி ஜெபம் ஹோமம் என தேசிய விடுதலைக்காக இறைவனின் அருள் வேண்டும் கிரியைகளில் தானும் ஈடுபட்டு பிறரையும் ஈடுபடுத்திவந்தவர். நாட்டின் தொன்மையான பண்பாட்டிற்குப் புத்துயிர் கொடுக்க விழைந்தவர். அத்தோடு இல்லாமல் ஜெப யோகியாகவும் சித்திகள் பெற்றவராகவும் இருந்தார். இப்படிப்பட்ட பெருமை உடைய அவர் அண்ணாமலைக்கு நிகராக சலனமே அற்று சாந்த சொருபியாய் விளங்கிவரும் பகவானிடம் புகலடைந்து ஜெபத்தின் மூலமும் ஆதாரமும் அதிஷ்டானமும் ஆக விளங்கும் ஆன்ம ஞானத்திற்கு உரிய தீக்ஷையை முதன் முதலாக அருள் அமுதமாகப் பெற்றவர்.

கணபதி முனிவரைக் கண்ணுற்ற போதில் அவரது தோற்றத்திலும், யோக சாதனையிலும், சித்தி வல்லமையிலும், கவரப்பட்ட என்.ஆர்.கே அவரை வீழ்ந்து வணங்கினார். அவரிடம் அணுவின் உள் கட்டமைப்பு குறித்தும் வான் வெளியின் அதிசயங்கள் குறித்தும் பேசியபொழுது முனிவர் அவற்றை உள்வாங்கிப் பரவசப்பட்டது என்.ஆர்.கே.யின் புத்திக்கூர்மையைப் போற்றும் சான்றாக இருந்தது என்றே கொள்ளலாம்.

இவ்வாறு என்.ஆர்.கே.யின் மனம் வானில் பறந்த நிலையில் பகவானைப் பார்க்க வந்தால் அவரை வீழ்ந்து வணங்கேன், அவர் நாட்டு நலனுக்குப் பலன் அளிக்கும் செயல் ஏதும் செய்யாமல் உலகக் கடமைகளில் இருந்து விலகியவர் என்று பகவானை மதிப்பீடு செய்து என்.ஆர்.கே.தன் உடன் வந்தவர்களிடம் அழுத்தமாகச் சொல்லிக்கொண்டே வந்தார். தோற்ற மாத்திரத்தில் புற உலக ஆர்ப்பரிப்புகளைக் கடந்திருந்த சற்குருவை சமூகத்திற்குப் பயன் இல்லாதவர் என்று சிறு மதியால் அவர் கணித்துவிட்டார். ஆனால் அவரும் பகவானும் எதிர்கொண்ட அந்நிகழ்ச்சி அவரை முற்றிலும்

புதியதொரு பரிமாணத்தில் கொண்டுபோய்விட்டது. சொல்லிக் கொண்டே வந்தவர் பகவானைப் பார்த்த கணமே கீழே விழுந்து வணங்கிவிட்டார். இது அவருக்கு ஒரு விதத்தில் வெட்கமாகப் போய் விட்டது.

இருந்தும் தோல்வியை ஒப்புக் கொள்ளாமல் பகவானை எதிர் நோக்கினார். பகவானும் அவரை நோக்கியவாறு இருந்தார். பகவானை ஏதாவது ஒரு கேள்வி கேட்டு அவர் கொடுக்கும் பதிலை வைத்தே அவர் சொல்வது சரி இல்லை என்று நிருபித்து அவரை வாதத்தில் வெல்ல வேண்டும் என்று என்.ஆர்.கே. நினைத்தார். இப்போது இப்படி உட்கார்ந்து கொண்டிருக் கின்றீர்களே. உங்களது அடுத்த நிலை என்ன? என்று ஒரு கேள்வியைக் கேட்டார். பெரியதொரு சவாலை பகவானுக்கு விடுத்து விட்டதாக ஒரு நினைப்பு. பகவான் பதில் ஏதும் கூறவில்லை.

மௌனத்தில் அடைக்கலம் புகுந்து பகவான் தப்பிக்கிறார் என்று என்.ஆர்.கே. நினைக்கின்றார். சற்று நேரத்தில் பகவான் அவரிடம் “நிலை என்கிறாயே? நிலை என்றால் என்ன?” என்று மறு கேள்வியைக் கேட்கின்றார்.

தான் உட்கார்ந்து இருக்கும் இடத்தின் கீழே ஒரு வெடிகுண்டு வெடித்துச் சிதறியதுபோல் என்.ஆர்.கே. திடுக்கிட்டு பீதியடைந்தவர்போல் ஆனார். இந்தக் கேள்வியை அவர் சற்றும் எதிர்பார்க்கவில்லை. அவர் எதிர்பார்த்தது இப்படியே போனால் அடுத்த நிலை மரணம் அதன் பின் உயிர் பரத்துடன் ஒன்றுதல் என்று இப்படியாக பகவான் தத்துவம் பேசுவார், விஞ்ஞானப் பார்வையில் இதற்கான நிரூபணமில்லை எனச் சொல்லி பகவானது விளக்கத்தை பொய்ப்பிக்கலாம் என்று எண்ணி இருந்தவருக்கு பகவானின் இந்தக் கேள்வி பிரம்மாஸ்திரம் ஆயிற்று. உடலைக் குறித்துத் தானே மரணம், அதற்குப் பதிலாக நிலை என்பது மனதின் நிலை எனலாம் என்று யோசித்தார். அப்போது பகவான்

மனம் என்றால் என்ன என்பாரே. அதற்கு என்ன பதில் சொல்வது என்று திகைத்த என்.ஆர்.கே. மனம் என்றால் என்ன என்று தனக்குள்ளேயே கேள்வி கேட்டவாறு உள் முகப் பட்டார். ஆனால் ஒரு பதிலும் வரவில்லை. மனம் செயல் அற்றுப் போய் விட்டது. மனச் சலனம் முற்றிலும் ஒடுங்கிவிட்டது.

பின்னர் அவருக்கு நிகழ்ந்த அனுபவத்தை அவரே மிகத் தெளிவாக விளக்குகின்றார். "நான் ஆதரவு அற்ற ஊமை ஆனேன். பகவானது கண்கள் பயங்கர பிரகாசமாய் ஒளிர்ந்து கொண்டிருந்தன. அந்தப் பிரகாசம் எனது கண்களை இறுகக் கட்டிப் போட்டுவிட்டது. பின்னர் அவருடைய வதனத்தில் பிரகாசமான வெற்றிப் புன்னகை தவழ்ந்தது. நான் உடல் உலக உணர்வினை இழந்தேன். எனது நான் என்னும் உணர்வு பெருமை அற்றுப் போய் சுத்த இருப்பு அறிவினால் விழுங்கப்பட்டது. சுத்த இருப்பு அறிவில் நாம ரூப கால தேச கருமங்கள் முற்றிலும் தொலைந்து போயின. 'நான் இருக்கிறேன்' என்னும் சுயம் ஜோதிப் பிரகாச நிலை அது. முதலும் முடிவும் அற்ற முழு மோன நிலை அது. உடல் சுற்றுப் புற உணர்வு மீண்ட பிறகும் உட் ஜோதிப் பிரகாசம் ஒளிர்ந்துகொண்டிருந்தது. கேட்பதற்கும் பதில் பெறுவதற்குமான கேள்விகள் ஒன்றும் இல்லாமல் போயின." சிலிர்க்கும் தோல்வியால் விளைந்த மகிழ்ச்சியில் திளைத்த நான் உடனே பகவானை வணங்கித் தலை தெறிக்க ஓடினேன்.

1929-ல் அவருக்கு டான்சிலெக்டமி என்னும் அறுவை சிகிச்சை தொண்டையில் செய்யப்பட்டது. அதன் பக்க விளைவாக ஆஸ்த்மா என்னும் இளைப்பு நோய் கடுமையாக அவரைத் தாக்கியது. ஆயுர்வேதம் ஆங்கில சிகிச்சைகள் பலன் அளிக்கவில்லை. ஆதலால் சென்னையில் இருந்து சித்த மருந்துகளைத் தரவழைத்து அவற்றின் மூலம் சற்றே குணம் அடைந்தார். அதை ஒட்டி சென்னை சென்று அம்மருந்துகளை வாங்கிக் கொண்டு

*வரும் வழியில் அண்ணாமலைக்கு பகவானைத் தரிசிக்க வந்து சேர்ந்தார். அவருடைய மாமா அப்பச்சி அய்யருடன் அவர் பகவானைத் தரிசித்தார்.*

*மதிய உணவிற்கு அவர்களும் அழைக்கப்பட்டனர். சித்த வைத்தியத்தில் காரமும் புளிப்பும் விலக்கச் சொல்லப்பட்டிருந்தது. இதை என்.ஆர்.கே. தனது மாமாவிடம் மெதுவாகக் கூறினார். சாம்பாரைத் தவிர்த்து விட்டு மோரும் சாதமுமாக சாப்பிடும் தனது எண்ணத்தையும் தெரிவித்தார். ஆதலால் சாம்பாரை விட வந்தவரிடம் அப்பச்சி அய்யர் சாம்பாரை என்.ஆர்.கே.க்கு விட வேண்டாம் என்றும் அவர் சித்த மருந்து எடுத்துக் கொள்வதால் பத்தியம் இருப்பதாகவும் சொன்னார். அதைச் செவிமடுக்காதவர் போல் சாம்பார்க்காரர் இரண்டு கரண்டிகள் சாம்பாரை என்.ஆர்.கே.யின் கலத்தில் விட்டுவிட்டுச் சென்றுவிட்டார். சொல்லியும் கேளாததனால் வெகுண்ட அப்பச்சி அய்யர் சத்தம் போட்டு எதிர்ப்பைத் தெரிவித்தார். பகவான் இந்நிகழ்ச்சிகள் அனைத்தையும் அருகில் இருந்து கவனித்தவர் போல், அப்பச்சி அய்யருடைய எதிர்ப்புக் குரல் எழுந்தவுடன், “உன்னுடைய உபாதைகள் தீர்வதற்கு வந்து வீட்டாய். சாப்பிடு,” என்று உரத்த குரலில் சொன்னார். என்.ஆர்.கே. இந்த உணவு தனக்கு மருந்து என்பதை உணர்ந்தார். சற்றே நாணினார். அதே நேரம் தனது உபாதைகளுக்குத் தீர்வு உத்திரவாதம் ஆகிவிட்டது என்று மிகவும் மகிழ்ந்து போனார். அந்த ஆண்டின் கடைசியில் பகவானுடைய ஆஞ்ஞை அருள் இரண்டின் முழுப் பயனை உணரவாரம்பித்தேன், என்று என்.ஆர்.கே. நன்றி நிறைந்து கூறுகின்றார்.*

*சின்னசுவாமி (பகவானின் தம்பியும் ஆசிரம முதல் சர்வாதிகாரியும் ஆவார்.) என்.ஆர்.கே.யிடம் பகவான் பாடல் தொகுப்பான ‘அருணாசல ஸ்துதி பஞ்சகம்’ சத்தியமங்கலம் வேங்கடராமையர் இயற்றிய ‘ரமண ஸ்துதி பஞ்சகம்’ ஆகிய இரு சிறு நூல்களை*

அளிக்கின்றார். அதோடு பகவானின் 21 வயது ஃபோட்டோ ஒன்றினையும் தருகின்றார். விடைபெறும் பொழுது பகவானை அணுகிய என்.ஆர்.கே.யிடம் பகவான் அந்தப் பாடல் புத்தகங்களை வாங்கி தன்னிடம் இருந்த பேனாவைக் கொண்டு சில திருத்தங்களைச் செய்தார். பின்னர் தனது ஃபோடோவின் மீது தனது வலது உள்ளங்கையைப் பரவவிட்டு என்.ஆர்.கே.யிடம் அளித்தார். எளியவனான எனக்கு நித்தியத்துவத்தை அருளும் பகவானின் பரிசாயிற்று அது என என்.ஆர்.கே. நன்றிப் பெருக்கோடு பதிவு செய்கின்றார்.

மாலை உணவிற்கும் அழைக்கப் பட்டதால் உணவு எடுத்துக்கொண்ட பின்னர் என்.ஆர்.கே. பகவானை வணங்கி விடைபெற்றுக் கொள்ளும் தருணம், “பகவானே! நான் ராம மந்திரம் ஜபம் செய்து வருகின்றேன். அருணாசல மந்திர ஜபம் அதை விட உயர்ந்தது அன்றோ?” என வினவினார். “இல்லை இல்லை” என்று வலுவாகக் கூறிய பகவான், “இரண்டும் ஒன்றை ஒன்று ஒத்தவை. ‘ரா’ என்றால் அது இருக்கிறது, ‘மா’ என்றால் நீயாக என்று பொருள். அருணாசலம் என்பதில் ‘அ’ என்றால் அது ‘ரு’ என்றால் நீ, ‘ந’ என்றால் இருக்கிறாய் என்றும் பொருள். உன்னுடைய மனதை உனது வாயாக்கு, ராம நாமம் விஷ்ணுச் சக்கரம் போல் உன் உள்ளத்தில் தொடர்ந்துகொண்டே இருக்கட்டும். யாரும் நீ ஜபம் செய்துகொண்டிருக்கின்றாய் என்று அறியத் தேவை இல்லை”, என்று தீக்ஷை அருளுகின்றார் பகவான். என்.ஆர்.கே. இடையிட்டு, “எல்லா நேரமும் நானிப்படியே செலவிட்டால் எனது ஆசிரியப் பணி எவ்வாறு நடக்கும்? எனது குடும்பப் பராமரிப்பு இடர்ப்படாதா?” எனக் கேட்டார். “யாருடைய நாமத்தை நீ ஜபிக்கின்றாயோ, அவர் முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்வார். அதைப்பற்றி நீ கவலைப் படாதே”, என சற்குரு உறுதியும் அளித்தார். கிடைத்தற்கரிய பாக்கியம்!

அவ்வமயம் சுத்தானந்த பாரதியார் எழுதிய பகவானின் வாழ்க்கையையும் வாக்கையும் உள்ளடக்கிய நூல் ஒன்று ஆசிரம வெளியீடாகத் தயார் ஆகிக் கொண்டிருந்தது. அதில் சேர்க்கப்படுவதற்கு திருச்சுழி, மதுரை மீனாக்ஷி கோயில் சார்ந்த சில ஃபோட்டோக்கள் தேவைப்பட்டன. அவற்றை சேகரித்து ஆசிரமத்திற்கு அனுப்பும்படி என்.ஆர்.கே. கேட்டுக்கொள்ளப் பட்டார். டிசம்பர் மாதம். மழைக் காலம். சித்த மருந்துகளின் பக்கவிளைவுகளினால் குடல் அழற்சிக்கு உள்ளானார் என்.ஆர்.கே. மேலும் இளைப்பு நோய். மூலம், அமீபியாஸிஸ் என்னும் நுண்ணுயிரியின் தாக்கத்தால் வயிற்றுப் போக்கும் அவரது உடல் நிலையைக் கடுமையாகப் பாதித்தது. அந் நிலையிலும் ஆசிரமத்திற்கு வேண்டிய ஃபோட்டோக்களையும், ஃபோட்டோ எடுக்க அனுமதி கிட்டாத இடத்தில் வரைபடங்களுக்கும் ஏற்பாடு செய்து, உரிய காலத்தில் ஆசிரமத்திற்கு அவற்றை அனுப்பினார். தனது உடல் உபாதைகளைப் பற்றி ஏதும் எழுதவில்லை. ஆசிரமத்திலிருந்து ‘ஸ்ரீ ரமண விஜயம்’ என்னும் தலைப்பில் அமைந்துள்ள அந்த நூல் அவருக்கு அனுப்பப்பட்டது. அன்றிலிருந்து அந்த நூல் உள் ஆர்வம் எழச்செய்வதாகவும் மறை நூலாகவும் விளங்குகின்றது என்கிறார்.

அதன் பிறகு டிசம்பர் கடைசி வாரத்தில் அவர் மீண்டும் நோய்வாய்ப்பட்டு படுத்த படுக்கை ஆனார். ரத்தமும் கோழையுமாக துப்பிகொண்டே இருந்தார். குடல் வலி குடைந்து எடுக்க, சளியும் ரத்தமுமாய் மலம் பல முறை வெளிப்பட்டது. மகனுக்கு நான்கே வயது. மகள் ஆறு மாதக் குழந்தை. இருவரையும் வைத்துக்கொண்டு அவரது மனைவி சுப்பலக்ஷ்மி அம்மாள் கண்களில் நீர் மல்க அவர் ஆபத்தான நிலையில் இருப்பதாக தனது பெற்றோருக்குத் தந்தி அனுப்பினார். இரண்டு நாட்களுக்கு மேல் தனது உயிர் தங்காது என அவர் சுப்பலக்ஷ்மி அம்மாளிடம் சொல்கின்ற தருணம் உயரமான ஒல்லியான ஓர் உருவம் அவருக்கு அருகில் வந்து குனிந்து பார்த்தது. அது

*விளாச்சேரி மணி அய்யர். பகவானின் இளம் வயது நண்பர். திருவண்ணாமலையில் பகவானின் ஜயந்தி விழாவில் பங்கெடுத்துகொண்டு வரும் வழியில் என்.ஆர்.கே.யைப் பார்க்க வந்தவர். நிலைமையைப் புரிந்துகொண்டு பகவானின் விபூதி குங்குமப் பிரசாதத்தை எடுத்து என்.ஆர்.கே.யின் நெற்றியில் குங்குமப் பொட்டு ஒன்று வைத்துவிட்டு அவரது இமைகளுக்கு மேல் விபூதியை நன்கு அழுத்தித் தேய்த்துவிட்டார். உடனேயே ஆனந்தப் பரவசம் என்.ஆர்.கே.யின் உடலை சிலிர்க்க வைத்தது. திடமான உடல் நலம் பெற்றுவிட்ட உணர்வு இழையோடியது. படுத்து இருந்தவர் எழுந்து உட்கார்ந்து கொண்டு தனது மனைவியைப் பார்த்து. "அம்மா! நான் நன்றாக குணமடைந்து விட்டேன். நான் மரித்துவிடமாட்டேன். பயப்படாதே" என்று தேற்றினார்.*

*அடுத்த நாள் அவரது மனைவியின் பெற்றோரும் அவர்களோடு அவரது உறவினருமான டாக்டர் ராஜகோபால் என்பவரும் வந்து சேர்ந்தனர். ஊசியில் மருந்து கொடுக்கப்பட்டது. பல மாதங்கள் தூக்கம் இல்லாமல் அவதிப்பட்டவர் முதன்முதலாக உறக்கத்தில் ஆழ்ந்தார். பின்னர் மருந்துகள். ஒன்றன்பின் ஒன்றாகக் குடல் வலி நீங்கியது, இடைவிடாது போய்க்கொண்டிருந்த மலம் நின்றது; பெருங்குடல் இயல்பு நிலைக்கு வந்தது. ஒரு மாத விடுமுறையில் கரூருக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கே டாக்டர் ராஜகோபலின் சிகிச்சை தொடர முழு நலம் அடைந்தார். அவரைத் துன்புறுத்திகொண்டிருந்த ஆஸ்த்மா சுவடு தெரியாமல் போய்விட்டது. பகவான் மகரிஷி அருணசல சிவ ரமணா தன்னை மரணத்தின் பிடியில் இருந்து மீட்டார் என்று மகிழ்ந்தார்.*

*மூலம்: என்.ஆர்.கே.யின் நினைவுக் குறிப்புக்கள், ஆசிரமத்தில் காக்கப்பட்டு வரும் மூலக் கட்டுரை, டேவிட் காட்மனின் The Power of the Presence 1 என்னும் நூல்.*

# ரமண மையங்களை நோக்கி தொடர் பயணக் கட்டுரை

## நங்கநல்லூர்

*பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளுக்கு சென்னை போன்ற பெருநகரங்களிலும் பல்வேறு இடங்களில் சத்சங்க அமைப்புகள் உள்ளன. இதில் பகவான் விதேகம் அடையும் முன்னர் ஆரம்பித்த சத்சங்க அமைப்புகளும் உண்டு. இந்த வருடம் ஆகஸ்ட் மாதம் இரண்டு சத்சங்கத்தினரை சந்திக்கும் பெரும்பாக்கியம் கிடைத்தது. அதில் ஒன்று நங்கநல்லூர் ஸ்ரீ ரமண சத்சங்கம் ஆகும். திரு.கணேஷ் அவர்களே பழவந்தாங்கல் ரயில் நிலையத்திற்கு வருகை புரிந்து நங்கநல்லூரில் இருக்கும் ரமண அன்பர்களின் இல்லங்களுக்கு அழைத்துச் சென்றார். முதலாவதாக நாம் சந்தித்தது திரு. சுப்பிரமணியம் ஆவார். இனி அவருடன் தான் நாம் பயணிக்கப் போகிறோம்.*

*'காமகோடி பிரதீபம்' என்னும் மாத இதழில் 1987-1988ஆம் ஆண்டுகளில் திருவண்ணாமலையைப் பற்றிய 26 தொடர் கட்டுரைகளைப் படித்து வந்தேன். அதற்கு முன்னர் திருவண்ணாமலை செல்லும் வாய்ப்பு ஏனோ அமையவில்லை. இந்தக் கட்டுரைத் தொடரை படித்த உடன் உடனடியாக திருவண்ணாமலை சென்று ஸ்ரீ ரமணாஸ்ரமத்தை தரிசிக்க வேண்டுமென்ற ஆவல் மேலோங்கி இருந்தது. உடனே என் வீட்டிற்கு அருகில் குடியிருந்த பகவானின் பக்தரான Dr. M.R. கிருஷ்ணமூர்த்தி ஐயரின் புதல்வரான திரு. R.K.வெங்கட்ராமன் அவர்களிடம் சென்று ரமணாஸ்ரமத்தில் தங்குவதற்கான சிபாரிசு கடிதம் தருமாறு கேட்டுக் கொண்டேன். எந்தவித யோசனையும் இன்றி உடனே கடிதம் எழுதிக் கொடுத்தார்.*

கடிதத்தை எடுத்துக்கொண்டு உடனடியாக திருவண்ணாமலை ஸ்ரீ ரமணாஸ்ரமம் விரைந்தேன். அப்போது அலுவலகத்தில் திரு. மணியண்ணா அவர்கள் இருந்தார். அவரிடமே கடிதத்தைக் கொடுத்தேன். அதைப் பிரித்து படித்து என்னை நோக்கி ஒரு புன்முறுவல் பூத்தார். இவர்கள் (M.R.கிருஷ்ணமூர்த்தி) எல்லாம் Bhagavan's People அவர்களுடைய ஆஸ்ரமம் தான் இது. கண்டிப்பாக உங்களுக்கு வேண்டிய உதவிகளை ஆஸ்ரமம் செய்து தரும் என்று கூறி எனக்காக ஒதுக்கப்பட்ட அறைக்கான சாவியைக் கொடுத்தனுப்பினார்.

மூன்று நாட்கள் எப்படி நகர்ந்தது என்றே தெரியவில்லை, ஆஸ்ரமத்தை விட்டு சென்னைக்குத் திரும்ப மனமே வரவில்லை பேருந்தில் கிளம்பும்போது அண்ணாமலை கண்ணை விட்டு மறைந்தாலும் ரமண பகவானின் சந்நிதியில் ஏற்பட்ட அனுபவங்களை மறக்க முடியவில்லை. நமக்கே இப்படி இருக்கிறதே. சாட்விக், கோஹன், பிரண்டன் போன்றோருக்கு சொல்லவா வேண்டும் என்ற எண்ணமே தோன்றியது. இந்த ரமணானுபவத்தைப் பற்றி என்னுடைய சகோதரர்களுக்கு உடனே கடிதம் எழுதத் தவறவில்லை.

பிறகு நங்கநல்லூரில் அமைந்திருக்கும் சத்ய சாய் பாபாவின் சமாதியில் சில காலம் சேவைகள் செய்து வருவது, பஜனைகளில் கலந்து கொள்வது என்று நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தது. இருந்தாலும் ஒவ்வொரு மாதமும் திருவண்ணாமலைக்குச் செல்வதை நான் தவறவிட்டதில்லை.

அப்படி ஒரு நாள் 1993-ஆம் ஆண்டு எனது இல்லத்திற்கு ஹிந்து காலனியில் குடியிருக்கும் நண்பரான திரு. ராமமூர்த்தி என்பவர் வருகை புரிந்து சுப்ரமணியம், நான் தற்போது ஆர்தர் ஆஸ்போர்ன் அவர்கள் எழுதிய Sri Ramana Maharshi and the Path of Self Knowledge என்ற புத்தகத்தைப் படித்துக் கொண்டிருக்கிறேன். நாம்

ஏன் இதே நங்கநல்லூரில் பகவான் ரமணருக்கென்று ஒரு சத்சங்க அமைப்பு துவங்கக் கூடாது என்ற எண்ணம் உதித்தது. உடனே கிளம்பி உங்களைச் சந்திக்க வந்து விட்டேன் என்று கூறினார். நான் உடனே அப்படி ரமண சத்சங்கம் என்று ஆரம்பித்தால் சொந்தமாகக் கட்டிடமோ மற்றும் யாரிடமும் சென்று பணம் வசூலிப்பது என்ற ஒன்றே இருக்கக் கூடாது. நம்மிடம் இருக்கின்ற பணத்தை வைத்து மட்டும் சத்சங்கம் நடத்துவோம் அதுவும் இல்லையென்றால் விபூதியை மட்டும் வைத்துக் கொண்டு அஷ்டோத்ரம் சொல்லி அக்ஷரமணமாலை பாராயணம் செய்து ஆரத்தி காட்டுவோம் என்று கூறினேன். இந்தத் தலைவர், செயலாளர் மற்றும் நிர்வாகக் குழுக் கூட்டம் என்று எதுவும் வேண்டாம் என்று தீர்க்கமாக இருந்தோம்.

பகவானின் சித்தப்பா சுப்பய்யர் (மதுரை ரமண மந்திரம் இவர் வாழ்ந்த இல்லம்) அவர்களின் பேரன்கள் மூன்று பேர் திரு.வெங்கட்ராமன், திரு. சந்தான கோபாலன் & திரு. சுந்தர ராமன் நங்கநல்லூரில் இருந்தனர். இதில் முதலானவர் திரு.வெங்கட்ராமன் (சில ஆண்டுகளுக்கு முன்னர் பகவானின் திருவடிகளில் கலந்து விட்டார்). அவர்களைச் சந்திக்க முன்னாள் ரமணாஸ்ரமத் தலைவர் திரு. T.N. வெங்கட்ராமன் (ஸ்வாமி ரமணானந்த சரஸ்வதி) அவர்கள் 1994 ஆம் ஆண்டு நங்கநல்லூருக்கு வந்திருந்தார். அப்போது விரைவில் ஸ்ரீ ரமண சத்சங்கம் துவங்க இருப்பதைப் பற்றிக் கூறியவுடனே ரூ.1000/ எடுத்து கொடுத்து பகவானின் ஆசி எப்போதும் உண்டு; சிறப்பாகத் துவங்குங்கள் என்று கூறிவிட்டு அருணைக்கு புறப்பட்டார்.

செப்டம்பர் மாதம் 1 ஆம் தேதி (பகவான் மதுரையை விட்டுப் புறப்பட்டு அருணையை அடைந்த தினம்) 1994-ஆம் ஆண்டு இந்த ரமண சத்சங்கமானது இனிதே துவங்கப்பட்டது. நங்கநல்லூரில் அமைந்துள்ள மாடர்ன் ஸ்கூல் பள்ளி வளாகத்தில் இந்த சத்சங்க நிகழ்ச்சி

கடந்த 28 ஆண்டுகளாக பகவான் ரமணரின் பரிபூரண கருணையினால் தங்குதடையின்றி நடைபெற்று வருகிறது. மேலும் ஒவ்வொரு மாதம் மூன்றாம் ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 4.15 முதல் 6.30 மணி ரமண பக்தரான திரு.கணேஷ் அவர்களின் இல்லத்திலும் நடைபெற்று வருகிறது. மேலும் பகவான் ஜயந்தி, ஆராதனை விழாக்கள் ஹிந்து காலனியில் அமைந்துள்ள பிரவசன மண்டபத்திலும் நடைபெற்று வருகின்றன.

இந்த ரமண சத்சங்கத்திற்கு பல்வேறு ஆன்மிக பெரியோர்களும் மற்றும் சமய சான்றோர்களும் கலந்து கொண்டுள்ளார். சத்சங்கத்தின் வெள்ளி விழா ஆண்டிற்கு (2019) தேனி சுவாமி ஓம்காராநந்தா அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார். மேலும் பகவானின் முதல் ஆங்கில வாழ்க்கை வரலாறான Self Realisation என்னும் புத்தகத்தைத் தமிழாக்கம் செய்து ‘ஆத்மானுபவம்’ என்னும் தலைப்பில் வெளியிட்டோம்.

நங்கநல்லூரைச் சேர்ந்த திரு.சேஷாத்ரி அவர்கள் தீவிர சீரடி சாய்பாவின் பக்தர். மயிலாப்பூரில் இருக்கும் அகில இந்திய சாய் சமாஜ் இருந்து வெளிவரும் சாய் சுதா என்ற மாத இதழின் ஆசிரியர் குழுவில் இருப்பவர். Self Realisation என்ற புத்தகத்தை எழுதிய B.V.நரசிம்ம சுவாமியின் நண்பரும் கூட அவரிடம் சென்று இந்த Self Realisation புத்தகத்தைத் தமிழாக்கம் செய்து தருமாறு ஒரு அன்புக் கட்டளையிட்டோம் ஆனால் அவர் உடனடியாக அதைச் செய்யாமல் சில ஆண்டுகள் கடந்த பின்பே செய்து முடித்தார். இந்தப் புத்தகம் வெளிவருவதற்கு வானதி பதிப்பகத்தாரின் ஆதரவு எல்லையற்றது. அவர்களின் பதிப்பகத்தின் புத்தகம் தயார் செய்வதைப் போல அட்டைப் படம் தயாரிப்பது, பைண்டிங் சரிப்பார்ப்பது என்று பக்கபலமாக இருந்தனர்.

ரமண சத்சங்கத்தின் மூலம் இரண்டாவதாக வெளிவந்த புத்தகம் ரமண பக்தரான திரு. தியாகராஜன் அவர்கள்

*பகவான் ரமண தத்துவங்களை வகைப்படுத்தி சிறிய குறிப்புகளாகத் தொகுத்தளித்த 'இயல்பில் இரு' என்ற புத்தகமாகும். இப்படி பகவானின் திருவருள் கருணையால் அனைத்தும் சிறப்பாக நடைபெற்று வருகிறது.*

*திரு.சுப்ரமணியம் அவர்களை நாம் சந்தித்த பிறகு திரு. கணேஷ் அவர்கள் நம்மை அழைத்துக்கொண்டு இந்த சத்சங்கம் துவங்குவதற்கான விதையை முதன்முதலில் விதைத்த திரு.ராமமூர்த்தி அவர்களைச் சந்திக்க அவருடைய இல்லத்திற்கே நம்மை அழைத்துச் சென்றார். 94 வயதிலும் கூட மிகவும் சுறுசுறுப்பாக இயங்கும் அந்த பக்தரை தரிசித்து விட்டு திரு.சந்தான கோபாலன் என்பவரைச் சந்திக்கச் சென்றோம். தான் இளம் வயதில் பகவானைச் சந்தித்த ஒரு சில நிகழ்ச்சிகளை மட்டும் கூறி பகவானிடம் இருந்த தம்முடைய குடும்பத்தினரை அவர் வீட்டில் மாட்டி இருந்த புகைப்படத்தில் அறிமுக செய்து வைத்தார்.*

*குறிப்பு: மேற்கூறிய தகவல்கள் அனைத்தும் சென்ற ஆகஸ்ட் மாதம் 15-ஆம் தேதி நங்கநல்லூரில் உள்ள ரமண சத்சங்கத்தினர் இல்லங்களில் பதிவு செய்யப்பட்டவை.*

*பகவான் ரமண மகரிஷி அருணாசல பிரதக்ஷிணத்தைப் பற்றி இவ்வாறு கூறியுள்ளார்:*

*பிரதக்ஷிணமென்பது படைப்பனைத்தும் எல்லையிலா என்னுளே சுழல்வன வென்றுணர்தலே யென்று ரிபு கீதையிற் கூறப்பட்டுள்ளது. அருணாசலத்தைப் பிரதக்ஷிணம் செய்தல் அகிலவுலகையும் பிரதக்ஷிணம் செய்தலுக்கு நிகரென்று சொல்லப்படும். அதாவது, அகிலவுலகும் அருணாசலத்தில் அடக்கமென்ற வாறாம். அருணாசல ஆலயப் பிரதக்ஷிணமும் அவ்வாறே சாலச்சிறப்புடையதாம். ஆகவே, முடிவில் எல்லாம் ஆத்மாவில் அடக்கமென்பதே அகில வேதாந்த சித்தாந்தமாம்.*

*- பகவத் வசனாம்ருதம் நூலிலிருந்து*

# நான்

## மகா கவி பாரதியார்

*வானில் பறக்கின்ற புள்ளெலாம் நான்,*
*மண்ணில் திரியும் விலங்கெலாம் நான்;*
*கானில் வளரும் மரமெலாம் நான்,*
*காற்றும் புனலும் கடலுமே நான்*

*விண்ணில் தெரிகின்ற மீனெலாம் நான்,*
*வெட்ட வெளியின் விரிவெலாம் நான்;*
*மண்ணில்கிடக்கும் புழுவெலாம் நான்,*
*வாரியினுள் உயிரெலாம் நான்,*

*கம்பனிசைத்த கவியெலாம் நான்,*
*காருகர் தீட்டும் உரவெலாம் நான்;*
*இம்பர் வியக்கின்ற மாட கூடம்*
*எழில்நகர் கோபுரம் யாவுமே நான்,*

*இன்னிசை மாதரிசையுளேன் நான்,*
*இன்பத்திரள்கள் அனைத்துமே நான்;*
*புன்னிலை மாந்தர்தம் பொய்யெலாம் நான்,*
*பொறையருந் துன்பப் புணர்ப்பெலாம் நான்.*

*மந்திரங்கோடி இயக்குவோன் நான்,*
*இயங்கு பொருளின் இயல்பெலாம் நான்;*
*தந்திரங் கோடி சமைத்துளோன் நான்.*
*சாத்திர வேதங்கள் சாற்றினோன் நான்.*

*அண்டங்கள் யாவையும் ஆக்கினோன் நான்,*
*அவை பிழையாமே சுழற்றுவோன் நான்,*
*கண்டல் சக்திக் கணமெலாம் நான்*
*காரணமாகிக் கதித்துளோன் நான்.*

*நானெனும் பொய்யை நடத்துவோன் நான்,*
*ஞானச் சுடர்வானில் செல்லுவோன் நான்;*
*ஆனபொருள்கள் அனைத்தினும் ஒன்றாய்*
*அறிவாய் விளங்குமுதற்சோதி நான்.*

# ஹம்சா ராமையா
# பகவானின் மடியிலும் காலடியிலும்

**ரவி & ஸ்ரீதர்**

*அந்த ஒன்றரை வயதுக் குழந்தை திடீரென கடுமையான வயிற்று வலியால் துடிக்கிறது. என்ன செய்வதென்று தெரியாமல், அதன் தாயார், தன் குழந்தையை அருகில் இருந்த கோவணாண்டி மனிதரின் மடியில் கிடத்தி, “குழந்தை ஓயாமல் அழுகிறது. எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை, அதனால் இங்கு தூக்கிக்கொண்டு வந்து விட்டேன்”, என்கிறாள்.*

*பின் அந்தப் பெண் மற்ற பெண்களுடன் அமர்ந்து, முறத்திலிருந்து கற்களைப் பொறுக்கத் தொடங்குகிறாள். அம்மனிதர் தனது கையைக் குழந்தையின் வயிற்றின் மீது தடவ, குழந்தை, உடனடியாக வயிற்று வலியிலிருந்து விடுபட்டு அமைதியாகத் தூங்குகிறது. நீண்ட நேரத்துக்குப் பிறகு, “ஏன் ராஜம்மா, குழந்தையை மறந்து விட்டாயா!” என்று அந்த மனிதர் அந்தப் பெண்ணை அழைக்கிறார். அப்போது தான் அந்தப் பெண் தன் குழந்தை நினைவு வந்தவளாய் அவளை எடுத்துக்கொள்ள எழுகிறாள்.*

*இந்தச் சம்பவம் நடந்தது திருவண்ணாமலை ரமணாச்ரமத்தில், இப்போதுள்ள பழைய தரிசன கூடத்திற்கருகில் (Old Hall). அது 1926-ம் ஆண்டின் ஆரம்பம். அந்தக் கௌபீனதாரி பகவான் ஸ்ரீ ரமண மஹர்ஷி.*

*மணவாசி ராமஸ்வாமி ஐயர் எனும் அன்பர் 1907-இல் விருபாக்ஷ குகையில் பகவான் இருந்தபோது வந்து தரிசித்து சரணடைந்தார். அவர் பகவான் மீது பல பாடல்களை இயற்றினார். அவற்றில் மிகவும் பிரபலமானது ‘சரணாகதி’ பாடல். ராமஸ்வாமி*

*ஐயரின் உடல்நலம், குடும்ப விவகாரங்கள் எனப் பல பிரச்சினைகளை பகவானிடம் சொல்ல வேண்டும், அவ்வளவே. அந்தப் பிரச்சினை தீர்ந்து விடும். இது எண்ணற்ற ரமண பக்தர்களின் அனுபவம். ராமஸ்வாமி ஐயருக்கு இது போன்ற பல அனுபவங்கள் உண்டு. அவரது மனைவி, ஐந்து மகள்கள் மற்றும் ஒரு மகனும் பகவானின் தீவிர பக்தர்களாக ஆனதில் ஆச்சரியமில்லை.*

*மூத்த மகள் ராஜம்மா தனது 7வது வயதிலிருந்தே, அதாவது 1908 முதல், பகவானுடன் பழகும் வாய்ப்பைப் பெற்றாள். அவளும் அவளுடைய இரு தங்கைகளான சுந்தரமும் லலிதாவும் இன்னும் சில பெண்களுடன் வார இறுதி நாட்களில் விருபாக்ஷ குகைக்கு ஏறிப் போய் பகவானுடன் விளையாடுவார்கள். 1908-ல் பிளேக் நோய் பரவிய காரணத்தால் பகவான் அருணாசல மலையின் வடகிழக்கு அடிவாரத்தில் உள்ள பச்சையம்மன் கோயிலுக்கு தற்காலிகமாக இடம் பெயர்ந்தார். அங்கே அந்தப் பெண்கள் வந்து பகவானுடன் விளையாடுவார்கள். அருகில் உள்ள செடிகளில் இருந்து பூக்களைப் பறித்து, அவற்றைப் பொறுமையாக மாலையாகக் கட்டி பகவானுக்குக் கொடுப்பார்கள். நான்கைந்து பெரிய கற்களைக் கொண்டுவந்து, ராமர், சீதை, சிவன், பார்வதி, முருகன் என்றெல்லாம் அக்கற்களுக்குப் பெயரிட்டு பகவானிடம் இதுக்கெல்லாம் மாலை போட்டு பூஜை பண்ணுங்கோ பகவானே என்று கேட்பார்கள். பூஜை முடிந்ததும், அப்போது வடித்திருந்த சாதத்தை பகவானைக் கொண்டு நைவேத்தியம் செய்யச் சொல்லுவார்கள். நைவேத்தியம் ஆன பிறகு பெண்கள், "இந்தாங்கோ பகவானே! நீங்க பூஜை பண்ணினதுக்கு தக்ஷிணை" என்று கூழாங்கற்களை பகவானுக்கு 'தக்ஷிணை'யாக வழங்குவார்கள். அவர் மகிழ்ச்சியுடன் அவர்களின் தக்ஷிணையை ஏற்றுக்கொள்வார். விருபாக்ஷ குகையில், ராஜம்மாவுக்கும் அவள் தங்கைகளுக்கும் பகவானே பல நாட்கள் தலைமுடியை வாரிப் பின்னி*



ராஜம்மாள்



ஹம்சா ராமையா


விடுவது வழக்கமாக இருந்தது. அப்பேர்ப்பட்ட பாக்கியசாலிகள் மணவாசி தாத்தாவின் மக்கள். ராஜம்மாவும் மற்ற பெண்களும் பகவானுடன் பல்லாங்குழி, கோலிகுண்டு போன்ற விளையாட்டுகளை விளையாடுவார்கள். பரப்பிரம்மமேயான ஓர் உன்னத ஞானி குழந்தைகளுடன் குழந்தையாக மிக இயல்பான முறையில் நடந்து கொண்ட விதம் பிரமிப்பூட்டுகிறது. பல வருடங்களுக்குப் பிறகு, 1940களில், "இப்போது கூட, கோலிகுண்டு விளையாடுவதற்காக நாங்கள் தோண்டிய ஓட்டைகள் விருபாக்ஷாவில் இருக்க வேண்டும்" என்று பகவான் குறிப்பிட்டார்.

ராஜம்மாவுக்கு 13 அல்லது 14 வயது இருக்கும் போது, பகவானின் அத்தியந்த பக்தையான எச்சம்மா அவளுக்குத் திருமண யோசனை ஒன்று சிபாரிசு செய்தார். நீலகண்டன் என்ற இளைஞன் ராஜம்மாவுக்குப் பொருத்தமாக இருப்பான் என்று விருபாக்ஷ குகையில் பகவான் முன்னிலையில் ராஜம்மாவின் தந்தை ராமஸ்வாமி ஐயரிடம் எச்சம்மா சொன்னார். ராமஸ்வாமி ஐயர், அந்த இளைஞனைக் குறித்தோ அவன் குடும்பத்தைக் குறித்தோ நல்ல அபிப்பிராயம் கொண்டிருக்கவில்லை. தன் கருத்தை

பகவானிடம் கூறினார். "நீலகண்டன் நல்ல பையன், அவர்களின் குடும்பமும் நல்ல குடும்பம் தான். நீங்கள் இந்த சம்பந்தத்தைப் பேசி முடியுங்கள். நீலகண்டனின் குடும்பத்தினரும் பகவானின் பக்தர்கள்தான்," என்றார் பகவான். பகவானின் உறுதிமொழிக்குப் பிறகு அச்சம்பந்தத்தை ஏற்றுக் கொள்வதில் ராமஸ்வாமி ஐயருக்கு எந்தவிதத் தயக்கமும் இருக்கவில்லை. ஆனால் திருமணத்திற்குத் தேவையான பணத்திற்கு ஏற்பாடு செய்ய முடியாத தன் இயலாமையை வெளிப்படுத்தினார். பகவான் உறுதியான குரலில், "போய் ஏற்பாடு செய்யுங்கள்" என்றார். ராமஸ்வாமி ஐயருக்கு அதுவே போதுமானதாக இருந்தது. சம்பந்தத்தைப் பேசி முடித்து தேவையான ஏற்பாடுகளைச் செய்வதில் ஈடுபட்டார். திருமணத்திற்கான முஹூர்த்தத்தை பகவானே குறித்துக் கொடுத்தார். உறவினர்களும் நண்பர்களும் ராமசாமி ஐயருக்குப் பணம் மற்றும் பொருள் உதவிகள் செய்து ராஜம்மாவின் திருமணத்தை நல்ல முறையில் நடத்தி வைத்தனர்.

காலப்போக்கில் ராஜம்மாவுக்கும் நீலகண்டனுக்கும் மூன்று குழந்தைகள், இரண்டு மகன்களும் ஒரு மகளும் பிறந்தார்கள்; ரமணன், கோபாலமூர்த்தி மற்றும் ஹம்சா. இந்த ஹம்சாவைத் தான் அவள் ஒன்றரை வயதுக் குழந்தையாக இருந்தபோது பகவான் தன் மடியில் வெகு நேரம் வைத்திருந்ததை நாம் ஆரம்பத்தில் பார்த்தோம்.

ராஜலட்சுமி ஒரு இசைக்கலைஞர், பாடகி மற்றும் வீணை வாசிப்பார். அவர் ஆசிரமத்திற்குச் செல்லும் போது பகவானுக்கு முன்பாக வீணை வாசித்துக் கொண்டு உடன் பாடிக் கொண்டும் இருப்பார். அவர் ஒரு சிறந்த ஓவியரும் கூட. ஒருமுறை ராஜலட்சுமி, வரலட்சுமி தேவியின் படத்தை வரைந்து அதைப் பகவானிடம் காட்டினார். "நன்றாக வந்திருக்கிறது. இந்தப் படத்தை அச்சிட்டு, அம்பாளை வழிபட விரும்புபவர்களுக்கு ஏன் விநியோகிக்கக் கூடாது?" என்று பகவான் கேட்டார்.



*ராஜம்மாள் வரைந்த ஓவியங்கள்*

ராஜலட்சுமியும் அவரது கணவர் நீலகண்டனும் பகவான் சொன்னதை உத்தரவாகப் பாவித்து நூற்றுக்கணக்கான பிரதிகளை அச்சிட்டு வரலட்சுமி தேவியின் பக்தர்களுக்கு விநியோகம் செய்தனர். அந்தக் காலத்தில், நூற்றுக்கணக்கான பக்தர்களின் வீடுகளில், வரலட்சுமி விரத நாளில் ராஜலட்சுமி வரைந்த இந்தப் படத்தை வைத்து வழிபாடு செய்யப்பட்டது. பிற்காலத்தில் வரலட்சுமி தேவியின் திருவுருவங்கள் ராஜலட்சுமி அமைத்த மாதிரியைப் பின்பற்றி வரையப்பட்டவை தான்.

ஒருமுறை, 1940-களின் முற்பகுதியில், ராஜலட்சுமி ஒரு மயிலை வரைந்து, அதில் விருபாக்ஷ குகையில் எடுக்கப்பட்ட பகவானின் புகைப்படத்தை ஒட்டினார். வேல், ஈட்டி ஆகிய முருகப்பெருமானின் ஆயுதங்களை வரைந்து, புகைப்படத்தில் பகவான் அவ்வாயுதங்களைக் கையில் ஏந்தியிருப்பதுபோல் செய்திருந்தார். அதை அந்த வருடம் கிறிஸ்துமஸ் தினத்தன்று தரிசன ஹாலில் பகவானுக்குப் பரிசளித்தார். ஓவியத்தை மிகவும் பாராட்டிய பகவான் அதை நாள் முழுவதும் தன்னுடனே வைத்திருந்து, அன்று தரிசனத்திற்கு வந்திருந்த அனைவருக்கும் காட்டி, “இதைப் பாருங்கள், ராஜம்மா

என்னை மயிலின் மேல் உட்கார வைத்து விட்டாள்” என்று சொல்லிக் கொண்டிருந்தார். மணவாசி ராமஸ்வாமி ஐயரின் குடும்பத்தினர் பகவான் முருகப்பெருமானின் அவதாரம் என்ற நம்பிக்கை உடையவர்கள்.

பழைய தரிசன ஹாலில் பகவானின் சோபாவுக்கு அருகில் ஒரு சிறிய இடத்தில் விநாயகரின் களிமண் உருவம் இருந்தது. கோபாலமூர்த்தி அந்தச் சிலை தனக்கு வேண்டுமென்று விடாப்பிடியாக கேட்டுக்கொண்டிருந்தான். அது சுடப்படாத களிமண் என்றும் அது எளிதில் உடைந்து விடும் என்றும் பகவான் சொன்னார். கோபாலமூர்த்தி அவ்விநாயகர் சிலையை தான் மிகுந்த கவனத்துடன் பாதுகாப்பதாக பகவானிடம் வாக்குறுதி அளித்ததை அடுத்து பகவான் அந்தச் சிலையை அவனிடம் கொடுத்தார். கோபாலமூர்த்தி தனது வாழ்நாள் முழுவதும் அச்சிலையை கவனத்துடன் பாதுகாத்து வைத்திருந்தார், இந்த விநாயகர் சிலை அவரது குடும்ப பூஜை அறையில் வெள்ளிக் கவசம் செய்து வைக்கபட்டுள்ளது.

1937ல் ராஜம்மாளின் மூத்த மகன் ரமணனுக்கு ஒரு திருமண சம்பந்தம் வந்தது. அப்போது போளூரிலுள்ள தன் வீட்டிற்கு வந்திருந்த பெண்ணின் பெற்றோர்களை காத்திருக்கச் சொல்லிவிட்டு அங்கிருந்து காரில் திருவண்ணாமலை விரைந்தார் ராஜம்மா. பகவான் மலைக்குச் சென்றிருப்பதாக ஆசிரமத்தில் கூறினார்கள். தன்னுடன் அழைத்து வந்திருந்த 13 வயது ஹம்சாவுடன் மலை மீது ஏறத் துவங்கினாள் ராஜம்மா. சற்று தூரத்தில் பகவான் வருவதைக் கண்டார்.

அருகில் வந்த பகவான் அவ்விருவரையும் பார்த்துப் புன்னகைத்து, ராஜம்மா கொண்டு வந்திருந்த கூடையிலிருந்து தானே பேரிச்சம் பழத்தை எடுத்து ஒன்றை வாயில் போட்டுக் கொண்டார். பகவானிடம் தன் மகனின் திருமணத்திற்கு அனுக்கிரஹம் கேட்க

வந்திருந்த ராஜம்மாளுக்கு பகவானின் இந்தக் குறிப்பே போதுமானதாக இருந்தது. பகவான் ஹம்சாவிடம் திரும்பி, “என்ன பாக்கறே? உன் கல்யாணம் எப்போன்னு யோசிக்கிறியா? கவலைப் படாதே, உனக்குன்னு ஒருத்தன் பிறந்திருக்கான். சீக்கிரமே வருவான்.” என்றார்.

ஹம்சாவுக்கு திருமண வயது வந்ததும், ராஜம்மா பகவானிடம் இதைப் பற்றிக் கூறினார். “நீலம்கொள் மேகத்தின்” என்ற திருப்புகழ் பாடலைப் பாடச் சொன்னார் பகவான். “நீயும் இதைப் பாடலாம்” என்றார் பகவான் ஹம்சாவிடம். ஒருநாள், ஹம்சாவின் பாட்டி சுப்புலட்சுமி (மணவாசி ராமஸ்வாமி ஐயரின் மனைவி) மணவாசி பகவானைப் போற்றி இயற்றிய பாடலான ‘துதிக்க அறியேன் அய்யா’, என்று ஒரு இளைஞன் பாடுவதைக் கேட்டார். இளைஞன் (சேலம் ராஜகோபால ஐயரின் மனைவியின் அக்காவான) கௌரியின் மகன் என்று தெரிந்ததும் அந்த இளைஞனுடன் ஹம்சாவின் திருமணத்தை நிச்சயித்தால் நல்லது என்று சுப்புலட்சுமி ராஜம்மாவுக்குக் கடிதம் எழுதினார். பேச்சு வார்த்தைகள் தொடங்கி, சம்பந்தம் பேசப்பட்டு ராமையாவுடன் ஹம்சாவின் திருமணம் 1943-இல் நடந்தது.

திருமணம் முடிந்ததும், இருவரும் பகவானைத் தரிசிக்க வந்தபோது ‘திருச்சுழி மாகாத்மியம்’ புத்தகத்தின் மீனாட்சி தேவி மற்றும் சுந்தரேஸ்வரரின் தெய்வீகத் திருமணத்தின் அத்தியாயத்தை ஒரு பக்தர் வாசித்துக் கொண்டிருந்தார். ஹம்சாவும் ராமையாவும் உள்ளே நுழையும்போது, பகவான், “இங்கே, நாம் இந்த தெய்வீக திருமணப் பகுதியைப் படிக்கிறோம், இதோ மீனாட்சியும் சுந்தரேஸ்வரரும் உள்ளே நுழைகிறார்கள்” என்று கூறினார்.

ஹம்சா தனது முதல் குழந்தையைச் சுமந்தபோது, தன் பிரசவம் குறித்த பயம் அவருக்கு இருந்தது. ஒரு நாள், அவர் பகவான் சந்நிதியில் அமர்ந்திருந்தபோது,

மற்றொரு பக்தரிடம் பகவான், தான் மலையில் வசிக்கும் போது விறகு வெட்டப் போகும் நிறைமாத கர்ப்பிணி பெண்கள் மலையிலேயே பிரசவித்து, திரும்பி வரும் போது பெற்ற குழந்தையை பின்கழுத்தில் துணியால் கட்டி தொங்கவிட்டு கொண்டு, விறகையும் தலையில் சுமந்து வருவதையும் தான் அடிக்கடி பார்த்ததை விவரித்தார். ஹம்ஸாவின் பிரசவ பயம் அத்துடன் அவர் மனதை விட்டகன்றது. தன் பிரசவம் குறித்த அச்சத்தைப் போக்கவே மற்றொரு பக்தரிடம் பகவான் இவ்வாறு சொன்னதாக ஹம்சா பின்னாட்களில் சொல்வதுண்டு.

பகவானின் மஹா நிர்வாணத்திற்கு முந்தைய நாள், அதாவது ஏப்ரல் 13, 1950 அன்று, முடிவில்லாத ஜனக்கூட்டம் பகவானைத் தரிசிக்க க்யூ வரிசையில் மெல்ல மெல்ல ஊர்ந்து கொண்டிருந்தது. அப்போது, பகவான் படுத்திருந்த நிர்வாண அறைக்கு முன்னால் சுமார் நான்கடி அளவில் ஒரு பள்ளம் இருந்தது. ஹம்சா தன் குழந்தைகளுடன் பகவானைத் தரிசித்து விட்டு அதில் இறங்கி விட்டார். பகவானின் தம்பியும் ரமணாச்ரமத்தின் சர்வாதிகாரியுமான சின்னசாமி, "ஹம்சா, பகவானுக்கு உன் குழந்தைகளைக் காட்டினாயா?" என்று வினவினார். இந்தத் தருணத்தில் யாரோ ஒருவர் திடீரெனக் கீழே குதித்து ஹம்சாவையும் அவர் குழந்தைகளையும் பகவான் முன் அழைத்துச் சென்றார். ஹம்சா தன் குழந்தைகளை ஒவ்வொன்றாகத் தூக்கி பகவானிடம் காட்டினார். அப்போது பகவான் தன் மூடியிருந்த கண்களைத் திறந்து ஹம்சாவையும் குழந்தைகளையும் பார்த்துப் புன்னகைத்தார்.

ஒருமுறை ஹம்ஸா குழந்தையுடன் ஆசிரமம் வந்தபோது, பகவான் தன் காலில் உள்ள சிவப்பு மச்சத்தைக் காட்டி, இதைப்பற்றி உன் தாத்தா பாடியுள்ளார் என்று கூறினார். ராமஸ்வாமி ஐயரின் துதிக்க அறியேன் அய்யா என்ற ஆனந்த பைரவி பாடலில் முடிவில் வரும் வரிகள் தான் அவை:

*உலகின் கொடுமையினால் துயர் பலகால்*
*அடைந்ததனால் கண்ணீர்*
*உதிரமாக மிகவே வடித்துனையே சரணெனவே*
*அடைந்ததனால் மறுசெவலேறிய*
*ஆதி நால்வரும் அடைதற்கறி அதிதீவிர பருவமருள்*
*பதமேவிய வேதியா*

இதன் பொருள்: மக்கள் படும் துன்பங்களால் அவர்கள் வந்து உங்கள் காலடியில் சரணடைந்து இரத்தக் கண்ணீர் சிந்துகிறார்கள். அவர்களின் இரத்தக் கண்ணீர் உங்கள் பாதங்களில் ஒரு சிவப்பு அடையாளத்தை உருவாக்கியது. அதன் பெருமையை ஆதி நால்வரும்கூடப் புரிந்து கொள்வது கடினம்.

பகவானின் போதனை பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், பகவான் தனக்குச் சுட்டிக்காட்டிய பாதங்கள் மட்டுமே தனக்குத் தெரியும் என்றும் கூறுவார் ஹம்சா. "உனக்கு ஒன்றும் தெரியாது ஹம்சா, என் பாதங்களைப் பிடித்துக் கொள்; அது போதும்" என்று பகவான் குறிப்பினால் உணர்த்தியதாக ஹம்சா ராமையா எங்களிடம் கூறியதுண்டு.

1998-ல் ஸ்கந்தாஸ்ரமத்தில் மாட்டப்பட்டிருந்த ராஜம்மா வரைந்த மயிலின் மீது பகவான் அமர்ந்திருக்கும் ஓவியம் மங்கிப் போகத் தொடங்கி இருந்தது. ஹம்சாவும் தன் தாயைப் போலவே ஒரு ஓவியர் என்பதால் அவரிடம் அவ்வோவியத்தை, சரிசெய்து (restore) தருமாறு கேட்க, பகவானே தன்னிடம் ஒப்படைத்த பணி இதுவென்று அகமகிழ்ந்த ஹம்சா ராமையா, தன் தாய் ராஜம்மாவின் ஓவியத்தை மிகுந்த பூரிப்புடன் அழகாக புனரமைத்தார்.

குழந்தையாக பகவானின் மடியில் தவழும் பாக்கியம் பெற்று பகவானிடம் பூரண சரணாகதி அடைந்து நிறைவான வாழ்க்கை வாழ்ந்த ஹம்சா ராமையா தனது 92-வது வயதில் 2017-ம் வருடம் ஜனவரி 14-ம் தேதி பொங்கலன்று பகவான் காலடியில் ஐக்கியமானார்.



# எண்ணலை இறும் என்றருணாசலா

## தீபா மகேஷ்

பகவான் ரமணரின் பாடல்கள் பலவற்றுள் ரமண பக்தர்கள் அனைவரும் அறிந்த ஒரு பாடல் "அருணாசல அக்ஷரமணமாலை." பக்தியிலும், பாவத்திலும் தன்னிகரற்ற இந்தப் பாடலை நம்மில் பலர் தினமும் பாராயணம் செய்கிறோம்.

திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார் என்று சொல்வர். மாணிக்கவாசகப் பெருமான் சொல்ல சிவபெருமானே எழுதிய சிறப்புடையது இந்நூல். சிவபெருமான், ஒரு முதிய அடியவர் போல வேடம் பூண்டு, மாணிக்கவாசகர் சொல்ல இந்த நூலை எழுதினார். மாணிக்கவாசகர் சொல்ல தில்லை சிற்றம்பலவாணன் எழுதியது என்று எழுதி கையொப்பம் இட்டு, சிதம்பரம் நடராஜப் பெருமான் சந்நிதியில் வைத்து விட்டு மறைந்தார்.

மறுநாள், நடராஜர் பெருமான் சந்நிதியைத் திறந்த தீக்ஷிதர்கள், இந்நூலைக் கண்டு, மாணிக்கவாசகரைத் திருக்கோவிலுக்கு அழைத்து வந்தனர். அவரிடம், திருவாசகப் பாடல்களின் பொருளை விளக்குமாறு கேட்டபோது, "இதற்குப் பொருள் இதுவே" என்று நடராஜப் பெருமானைக் காட்டி, எம்பெருமானுடன் ஜோதி வடிவில் ஐக்கியமானார் என்பது வரலாறு.

அதேபோல, பகவானிடமும் ஒரு பக்தர் அக்ஷரமணமாலையின் பொருளைக் கேட்ட போது,

அதைத் தினமும் பாராயணம் செய்வதே அதன் பொருள் என்றார்.

அக்ஷரமணமாலையோ, கந்தர் அநுபூதியோ, கந்த சஷ்டி கவசமோ, எந்தப் பாடலோ, ஸ்லோகமோ ஆனாலும், நாம் அதை தினமும் பாராயணம் செய்யும்போது, ஆரம்பத்தில் பெரும்பாலும், சொற்களிலேயே நமது கவனம் இருக்கும். பிறகு நன்றாக 'மனனம்' ஆனபிறகு, சொற்களைத் தாண்டி பொருளுக்குள் நமது கவனம் செல்லும்.

இப்படிப் பொருளை உணர்ந்து ஒரு பாடலை பல காலம் பாராயணம் செய்யும்போது, சில சமயங்களில் ஒரு குறிப்பிட்ட, சொல்லோ, சொற்றொடரோ நமக்கு "தரிசனம்" தரும். அதாவது இதுவரை நாம் புத்தியால் புரிந்து கொண்டிருந்த அர்த்தத்தைத் தாண்டிய ஒரு பொருளை அது நமக்கு உணர்த்தும். அந்தப் பொருள் மனம், புத்தி கடந்த உள்ளுணர்வின் (intuition) வெளிப்பாடாக இருக்கும். இந்த உள்ளுணர்வு நம் மனம் எண்ணங்கள் அற்ற நிலையில் இருக்கும்போதே எழும். பகவான், இதை, அக்ஷரமண மாலையில் 57-வது பாடலில்

**நுண்ணுரு உனையான் விண்ணுரு நண்ணிட**
**எண்ணலை இறும் என்றருணாசலா.**

என்கிறார். நுண் உருவான, நுட்பமான, உன்னை நான், விண் உரு என்று உணர்ந்து, உன்னோடு ஹ்ருதயத்தில் ஒன்றாகக் கலந்திட தடையாக இருக்கும் எண்ண அலைகள் அழிய, எப்போது அருள் புரிவாய்? சரீரமும், மனமும் அற்ற, தூய ஆத்ம ஸ்வரூபமான பகவான், நம் போன்ற பக்தர்களுக்காகவே இவ்வாறு கேட்கிறார்.

எண்ணுவது மனத்தின் இயல்பு. எண்ணங்கள் அற்ற மனம் என்பது அலை இல்லாத கடல் போல அரிதான ஒன்று. மனம் விழிப்பு நிலையில் (ஜாக்ரத் - waking state) சதா எதையாவது எண்ணிக் கொண்டே

இருக்கிறது. நாம் படிக்கும் போதோ, கோவிலுக்குப் போகும் போதோ, ஸ்லோகம் சொல்லும் போதோ, எந்த வேலை செய்யும் போதோ, நம் மனதின் எண்ணங்களைத் தள்ளி நின்று கவனித்தால் இது விளங்கும். தூங்கும்போது இந்த எண்ண அலைகள் கனவு (dream) ரூபத்தில் வெளி வருகின்றன.

கனவுகள் அற்ற ஆழ்ந்த உறக்க நிலையில் (ஸுஷுப்தி-deep sleep) மட்டும்தான் மனம் எண்ணங்களற்று இருக்கிறது. அதனால் தான், உணவு வேண்டாம் என்று விரதம் இருப்பவர்கள் கூட, உறக்கத்தை வேண்டாம் எனத் தள்ளி வைப்பதில்லை. உடல் வலி, மன வேதனை என்று எல்லாவற்றுக்கும் தூக்கம் ஒரு அருமருந்தாக இருக்கிறது.

தூக்கத்தில் நாம் அறியாமல் அனுபவிக்கும் இந்த சுகத்தை, விழித்திருக்கும் போதே, நம்மால் அடைய முடிந்தால், அது எவ்வளவு சிறப்பாக இருக்கும்? எண்ணங்களற்ற நிலையில் மனம் அமைதிப்படுகிறது. இதை நாம் அறிந்திருந்தாலும், நம்மால், நம் எண்ணங்களைக் கட்டுப்படுத்த முடிவதில்லை.

நாம் ஆன்மீக சாதனையில் செய்யும் பல பயிற்சிகள் ஸ்லோகங்கள் பாராயணம் செய்வது, நாம சங்கீர்த்தனம், தினசரி பூஜை, தியானம், இவை எல்லாம் இந்த எண்ணங்கள் அற்ற நிலையை அடைவதற்கான முயற்சி தான். இவை அனைத்துமே பல விஷயங்களில் சிதறிக் கிடக்கும் எண்ண அலைகளை, ஒரே விஷயத்தில் குவித்து, கடவுளிடம் இருத்தி பக்தி செய்ய உதவுகின்றன.

அபிராமி அந்ததியில்,

ஒன்றாய் அரும்பிப், பலவாய் விரிந்து
இவ்வுலகு எங்குமாய் நின்றாள்,
அனைத்தையும் நீங்கி நிற்பாள்,

என்கிறார் அபிராம பட்டர்.

ஒன்றான ஒரு பொருள்தான், அந்த ஆத்ம வஸ்துதான், இவ்வுலகில் பலவாக மனிதர்களாக, மிருகங்களாக, மலை, செடி, கொடிகளாக, ஆறாக, கடலாக, எல்லாமுமாக விரிந்திருக்கிறது. அந்த ஒரு பொருள்தான் எல்லாவற்றையும், கடந்தும் நிற்கிறது. இந்த உண்மையை உணர்ந்தால், பலவற்றின் பின் ஓடித் திரியும் மனத்தை, எண்ணங்களை, அந்தப் பரம்பொருளிடம் இருத்த முடியும்.

இதை எப்படி செய்வது?

**பற்றுக பற்று அற்றான் பற்றினை.**

வெளி விஷயங்களில் உள்ள ஆசையை, மோகத்தை எல்லாம் விட்டு, அந்த இறைவனைப் பற்ற வேண்டும். இது முதல் படி.

அப்படிப் பற்றினால் என்ன ஆகும்?

**அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு.**

நமக்கு உலக விஷயங்கள் மீதுள்ள பற்று நாட்பட விட்டுப் போகும். *(Many becomes One)*.

பக்தி அதிகமாக, பற்றுகள் *(attachments)* குறையும். சரி, அடுத்து என்ன ஆகும்?

சதா சர்வகாலமும் இறைவனையே நினைத்து பக்தி செய்யும்போது அந்த இறையோடு நாம் ஒன்றி விடுகிறோம். *(One is dissolved in the Infinite)*

இதுவே எண்ணங்கள் அற்ற நிலை. நிச்சலதத்வம். இதுவே ஜீவன் முக்தி.

நிர்மோஹத்வே நிச்சலதத்வம்

நிச்சலதத்த்வே ஜீவன்முக்தி:

# மௌன நதி

**D. தியாகராஜன்**

*நதியையோ நதிக்கரையையோ ஒட்டியே உலகின் அனைத்து நாகரிகங்களும் தோன்றி வளர்ந்துள்ளன. சிந்து நதி நாகரிகம், நைல்நதி, மெசபடோமியா, மஞ்சள் ஆற்று நாகரிகம் என உலகின் அனைத்து பழமையான நாகரிகங்கள் இதற்கு உதாரணம். உணவுத் தேவைக்கு மட்டுமன்றி உயர்ந்த கலாச்சாரங்கள் தோன்றுவதற்கு நதியே ஆதாரமாக இருந்து வருகின்றதாதலால் நதிக்கரை நாகரிகங்கள் எனப் பொதுவில் கூறுகின்றனர்.*

*ஒரு ஜீவ நதி பாய்ந்து கொண்டிருப்பதால் அந்தப் பிராந்தியம் செழிப்புறுகிறது. உணவுத் தேவை கவலையற்று, பறவைகள், விலங்குகள், பசுமை பரந்த செடி, கொடிகள் மற்றும் விரிந்த ஆகாயம் போன்ற இயற்கை சூழல் மன அமைதியை மட்டுமன்றி மனதில் உயர்ந்த எண்ணங்களையும் உருவாக்குகின்றது. அது மட்டுமன்றி பல தலமுறைகள் போற்றும் சிறந்த கலாச்சாரங்கள் தோன்ற இந்தச் சூழல் வழிவகுக்கின்றன.*

*பகவான் ரமண மகரிஷிகள் எனும் ஜீவ நதி திருச்சுழியில் (கௌண்டின்ய நதி) ஊற்றாக தோன்றி அருணாசல ஸ்மரணத்தால் மதுரையில் (வைகையில்) நதியாக உருவெடுத்து திருக்கோவிலூர் (தென்பெண்ணை) வழியாக அருணாசலத்தை (சோணநதியில்) கலந்து ஸ்ரீ ரமணாச்ரமத்தில் பெரும் மௌன நதியாக ஓடிக் கொண்டுள்ளது.*

*இதை முருகனாரும் ‘சந்நிதி முறை’ இரண்டாவது தசாங்கத்தில் குயிலை நோக்கி,*

*"பண்முகமாம் பைங்குயிலே பண்ணவன்றன் மாநதிதான்
எண்முகமா யோடி யியங்காமே உண்முகமாய்
முந்தார்வ மோடு முயல்வார்கட் கானந்தம்
நந்தாத சீவ நதி".*

*- திருத்தசாங்கம் (2), குயிலோடு கூறல், பாடல், 4*

பொருள்: "ரமணனுக்கு பகவான் என்று பெயர். (இதய) சிற்றம்பலமே அவனுடைய நாடு. மோனமே அவனிருக்கும் ஊர். வற்றாத ஆனந்தமே அவனுடைய நதி. சுயஞ்சோதியே அவனுடைய மலை. திருவுடையார்க்கு ஆனந்த ஆக்கம் கொடுக்கும் தியாகமே அவனுடைய கொடியாகும்" என்கிறார்.

நதியோ தான் பாயும் பகுதியையும் அதைச் சுற்றியுள்ள பகுதியை மட்டும் வளப்படுத்தும். நமது சத்குருவின் அருள் நதியோ தம்மை மனத்தில் இருத்தும் உலகெங்கிலும் உள்ள அன்பர்கள் மன வயலில் பாய்ந்து அமைதியையும் ஆன்மிக மேன்மை எனும் பயிரையும் வளரச் செய்து கொண்டுள்ளது.

பி.வி. நரசிம்ம சுவாமி ரமண சாந்நித்யத்தில் தியான அனுபவத்தைப் பற்றி இவ்வாறு குறிப்பிடுகின்றார்:

"ஆச்ரமத்தில் சாதகனுக்கேற்ற அனுகூலமான சூழ்நிலை எப்பொழுதும் இருக்கின்றது. புதிதாக யாராவது ஆச்ரமத்திற்கு வந்தால் பகவான் அவர்களைப் புன்னகையால் வரவேற்பதோடு சரி. மகரிஷியும் அவர் உறையும் ஹாலில் விளங்கும் ஆழ்ந்த மௌனமும் வந்தவர்களைக் கவரும். மேலும் அவர்களது சலன மனமும் எண்ணங்களை இழந்து உள்முகம் நோக்கித் திரும்பும். பல பக்தர்கள் இந்த அனுபவத்தை அடைந்திருப்பதாகக் கூறுகின்றார்கள்.

மேலும் பலர் அவர்களுடைய வீட்டிலும் மற்றும் கோயில்களிலும் நதிக்கரையிலும் குளக்கரையிலும் தியானம் செய்யும்போது கிடைக்காத அமைதியும் மனத்தின் ஒருமுகப்பாடும் மகரிஷியின் சாந்நித்தியத்தில்

அமர்ந்த மாத்திரத்திலேயே கிடைத்துவிடுகிறது என்றும், எல்லாக் கவலைகளும் அவர்களை விட்டு அகன்றுவிடுகின்றன என்றும் அறுதியிட்டுக் கூறுகின்றனர். இதுவே பகவானின் அருள்.

மகரிஷியினைப் பற்றி அறிந்தவர்கள் அவரிடம் பேசவோ கேள்விகள் கேட்கவோ அங்குச் செல்வதில்லை என்று கூறுகின்றனர். மகரிஷியிடம் வருவதற்கு முன்னாலேயே அவர்கள் மனம் பலவிதமான தத்துவார்த்த விளக்கங்களில் சலித்துப்போய் வருகின்றனர். எனவே மேலும் இதைப்பற்றிக் கேள்வி கேட்பதில் அர்த்தமில்லை. மகரிஷியின் முன்னால் இருப்பதே மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது என்று கூறுகின்றனர்."

இந்தப் பேரமைதியில் திளைத்து மன மகிழ்ச்சியைப் பெறுவதற்கு இனிப்பினை நாடிவரும் எறும்புக் கூட்டங்கள் போல் மக்கள் வெள்ளம் நாளுக்கு நாள் இங்கு அதிகரித்து வருகின்றது.

ஸ்ரீ ரமணாச்ரமத்தில், 1995 ஆம் ஆண்டுவரையிலுமே காலை பூஜைக்குப் பிறகு ஆச்ரம வாசிகள் மற்றும் வெகு சிலரையே ஆச்ரம வளாகத்தில் காண இயலும். மாலை பாராயணத்திற்குப் பிறகு ஆச்ரமம் ஆள் நடமாட்டம் மிகக் குறைந்து, மிகவும் அமைதியாக இருந்த காலங்கள் உண்டு.

1996-ஆம் ஆண்டுக்குப் பின்னர் அருணாசலத்தில் பௌர்ணமி கிரிவலம் ஆரம்பித்தது. மாதா மாதம் எண்ணற்ற பக்தர்கள் மலையை வலம் வர ஆரம்பித்தனர். தற்சமயம் தினமும் ஆயிரக்கணக்கான அன்பர்கள், பொதுமக்கள், சுற்றுலாப் பயணிகள் என மக்கள் வரத்து அதிகரித்துள்ளது.

கொரோனா ஊரடங்கு நீக்கத்திற்குப் பின் முன்பைவிட பன்மடங்கு பக்தர்களும் பொதுமக்களும் வரத் துவங்கியுள்ளனர். காலை 5 மணி முதல் இரவு 9 மணி வரை பக்தர்கள் மட்டுமன்றி சுற்றுலாப் பயணிகள்

சாரைசாரையாக ஆச்ரமத்திற்கு வந்தவண்ணம் உள்ளனர். இன்னும் பத்து ஆண்டுகளில் மேலும் பல வளர்ச்சியினை ஆச்ரமம் காணக் கூடும்.

பகவான் முதன்முதலில் அருணாசலத்தை அடைந்த ஆரம்ப நாட்களில் பழனிசாமி மட்டுமே உடன் இருந்தார். பின்னர் அய்யாசாமி, அண்ணாமலை சுவாமி போன்ற ஒன்றிரண்டு அடியார்கள் அவருடன் சேர்ந்தனர். அண்ணாமலையார் ஆலயம், வாகன மண்டபம், இலுப்பை மரம், மாந்தோப்பு, ஐயங்குளம், அருணகிரிநாதர் கோயில், பவளக் குன்று, குருமூர்த்தம், விருபாக்ஷ குகை மற்றும் கந்தாச்ரமம் போன்ற இடங்களில் இருந்த சமயங்களில் ஜடபத்மநாபசாமி, ராமனாத பிரம்மச்சாரி, குஞ்சுவாமி போன்றோர் பகவானுடன் வந்து இருக்கலாயினர். எனவே பக்தர் குழாம் முன்பைவிடப் பெருகலாயிற்று.

தாயார் சமாதிக்குப் பின்னர், பாலி தீர்த்தக்கரையில் அமைந்துள்ள தற்போதைய ரமணாச்ரமத்திற்கு பகவான் வந்த பிறகு ஐம்பதிற்கும் மேற்பட்ட பக்தர்கள் ஆச்ரமவாசிகளாயினர். எண்ணற்ற மக்கள் வந்து செல்ல ஆரம்பித்தனர். 'மோர்வி' கட்டிடம் உருவானது. அந்தச் சமயத்தில் கந்தாச்ரமத்தில் பகவானுடன் இருந்த அன்பர்கள் மலைமீது இருந்த காலம்போல் தாம் மட்டும் பகவானுடன் இருக்கலாகாதா என்று எண்ணி இருக்கலாம். ஆயினும் காலத்தின் முன்நோக்கிய போக்கில் அனைத்தும் பல்கிப் பெருகும் என்பதே நியதி.

பகவான் மகாசமாதிக்குப் பின்னர் ஒவ்வொரு பத்து ஆண்டுகளிலும் ஆச்ரமம் பல வளர்ச்சியினைக் கண்டு வருகின்றது. பக்தர்களும் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றனர். பழம் பக்தர்கள் தாங்கள் வந்த சமயத்தில் இருந்து, கண்டு, உணர்ந்த ஆச்ரமமும் அமைதியும் பற்றி சிலாகித்துக் கூறுவர். அதேசமயம், பகவானின் சந்நிதானத்தில் இன்றும் கூட்டத்தின் நடுவிலும் பகவானுடன் நெடுநாட்கள் இருந்த குஞ்சு சுவாமி,

முருகனார் போன்ற பல பழம்பக்தர்கள் ஒருநாளும் ஆச்ரமத்தில் ஜன சந்தடி நிறைந்து வருவதைப் பற்றிக் குறை கூறியதில்லை. மாறாக சாந்நித்யமும் அருள் வெள்ளமும் கூடியிருப்பதாகவே கருதினர்.

காலமாற்றத்திற்கேற்ப இந்த பூமி யாவற்றையும் மௌனமாக பார்த்துக் கொண்டு தனது பணியை செய்தவண்ணம் சுழன்று கொண்டுள்ளது. அந்தந்த காலகட்டத்தில் வாழும் உயிரினங்களும் அந்தந்த காலத்தில் நிகழும் மாற்றத்தை ஏற்று வாழப் பழகிக் கொள்கின்றன.

ஞானத்தை எங்கிருந்தாலும் அடையலாம். அதற்குச் சூழல் தடையில்லை என்பதை கீழ்க்கண்ட பக்த விஜயம் கதையின் வாயிலாக ஒரு அன்பருக்கு பகவான் விளக்கினார்.

“விட்டோபா என்பவர் தன் குடும்பத்தை விட்டுக் காட்டிற்குச் சென்று சன்னியாசியாக இருந்தார் என்றும் ஞானதேவ் என்ற அவரது மகன் அவருடன் சென்று, ஒருவன் மனம் அவன் வீட்டில் இருந்தாலும் காட்டுக்குச் சென்றாலும் அவனுடனே செல்கிறது என்ற பகுதியைப் படித்துக் காட்டி ஞானத்தை வீட்டிலிருந்தே அடையலாம் என்றும் கூறினார்.”

மேலும் ஆன்மா எப்போதுமுள்ளது என்பதனை “ரமணோபதேச ரத்னமாலை” நூலிலும் பகவான் காலப்போக்கில் ஏற்படும் மாற்றங்களின் அடிப்படையில் ஒரே ஆத்ம வஸ்து இருக்கும் பேருண்மையை இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

“எப்போதுமுள்ளது ஒரே ஸத்வஸ்துவான ஆன்மாவே. அதன் பிரகாசத்தில்தான் மற்ற எல்லாப் பொருட்களும் பார்க்கப்படுகின்றன. நாம் அதை மறந்துவிட்டு காட்சியில் மட்டுமே கவனம் செலுத்துகிறோம். இந்தக் கூடத்திலுள்ள (ஹாலிலுள்ள) விளக்கு, அதில் ஆட்களிருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, எரிந்து கொண்டேயிருக்கிறது.

நாடக சாலையில் போல், யாராவது நடித்துக் கொண்டிருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, அங்கே விளக்கு எரிகிறது. அந்த விளக்கின் பிரகாசத்தினால்தான் கூடத்தையும், ஆட்களையும், நடிப்பையும் நம்மால் பார்க்க முடிகிறது. அந்தப் பிரகாசத்தில் தெரியும் பொருட்களிலோ தோற்றங்களிலோ நமது முழு கவனமும் ஆழ்ந்து விடுவதால் நாம் பிரகாசத்தைக் கவனிப்பதில்லை. நாம் ஜாக்ரத், ஸ்வப்ன ஸ்திதிகளில் காட்சி காண்கிறோம். நல்ல நித்திரையில் எதையும் காண்கிறதில்லை.

"ஆனால் இந்த ஹாலில் பல்பு எப்போதும் எரிவதுபோல், மூன்று அவஸ்தைகளிலும் சைதன்யம் அதாவது ஆத்மாவின் பிரகாசம் இருந்து கொண்டேயிருக்கிறது. நாம் செய்ய வேண்டியது பார்ப்பவனைப் பார்ப்பதே தவிர பார்க்கும் வஸ்துக்களில் கவனம் செலுத்துவதல்ல. பிரகாசத்தில் தெரியும் வஸ்துக்களில் கவனம் போகாமல் அந்தப் பிரகாசத்தில் போக வேண்டும்."

காலமாற்றங்களால் பல்வேறு கருவிகளால் நாம் பெரிதும் சாதிக்கிறோம் என்று எண்ணி அகங்காரப் படாமல் செயல்படவேண்டும் என்கிறார் பகவான். அகங்காரம் இல்லாமல் ஒருவன் என்ன செய்தாலும் அது அவனைப் பாதிக்காது என்று சூடாலா கதையின் வாயிலாக பகவான் விளக்குகிறார்.

"யோக வாசிஷ்டத்தில் சூடாலா என்ற ராணி எளிதாக ஞானம் அடைந்ததைக் கண்டு அவளுடைய கணவன் சிகித்வஜன் அரசனாக இருந்துகொண்டு ஆன்மாவை அடைய முடியாது. எல்லாம் துறந்து காட்டுக்குச் சென்று தவமியற்றினால்தான் ஆன்மாவை அடைய முடியும் என்ற வைராக்கியத்துடன் செல்கின்றான்.

அவன் நாட்டை ஆளும் பொழுதும் அவனுக்கு வைராக்கியம் இருந்தது. இந்த வைராக்கியத்தினால் அகங்காரத்தை அழித்து நாட்டை ஆண்டுகொண்டே அவன் ஆன்மாவை அடைந்திருக்கலாம். ஆனால் அவன் அவ்வாறு செய்யவில்லை. காட்டிற்கு வந்து தவம் செய்வதற்கு என்று நேரத்தை ஒதுக்கிப் பதினெட்டு



ஆண்டுகள் தவமியற்றியும் முன்னேறவில்லை. அவன் தன்னுடைய அகங்காரத்திற்கே இரையாகி விட்டான். சூடாலா அகங்காரத்தை விட்டுவிட்டு ஆன்மாவை அறியும்படி அவனுக்கு அறிவுறுத்தினாள். அவன் அவ்வாறே செய்து மோக்ஷமடைந்தான்."

பூமி உயிரினங்களையும், மாற்றங்களையும் உருவாக்கி, சுழன்று இடைவிடாது தன் பணியை செய்து கொண்டுள்ளது போலவே ரமணாச்ரமமும் மாறுதல்களையும் பலவித மனிதர்களையும் சந்தித்து வந்தாலும் ரமண சாந்நித்தியத்தை தன்னகத்தே வைத்து சுழன்று கொண்டுள்ளது.

ரமணாச்ரமம் சாதகனுக்கு ஒரு வரப்பிரசாதம் என்பதை கோஹன் தனது நினைவுகளில் இவ்வாறு விவரிக்கின்றார்:

"ரமணாச்ரமத்தில் சாதகனுக்கு மிகவும் அனுகூலமான விஷயம் என்னவென்றால் மற்ற ஆச்ரமங்களைப் போல எந்தவொரு நிர்பந்தமும் இல்லை. எந்தவொரு நிகழ்ச்சி நிரலையும் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை. சத்சங்கங்களோ, வகுப்புகளோ, பஜனைகளோ இல்லை. எனவே காலையில் சீக்கிரமாக எழுந்து, குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட நேரத்தில் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. பகவான் இந்த விஷயத்தில் மிகவும் தாராள மனப்பான்மை கொண்டவர்.

"எந்தவொரு விதிமுறைகளோ அல்லது கட்டுப்பாடுகளோ வைத்துத் தன்னுடைய அன்பர்களின் வாழ்க்கை முறையை நெறிப்படுத்த அவசியம் பகவானுக்கு இல்லை. பொதுவாக ஒரு கட்டுப்பாட்டை வைத்து அன்பர்களை ஒரு நெறிமுறைக்குள் கொண்டு வருவதில் அவருக்கு நம்பிக்கையில்லை. ஏனெனில் அவரே இவைகளெல்லாம் இல்லாமல், அடைய வேண்டிய உன்னதமான நிலையை அடைந்து எப்பொழுதும் இருக்கும் பிரத்யட்ச உண்மையை உணர்ந்து விட்டார். மலர் மலர்வதுபோல் சரியான காலத்தில் ஆன்ம சாட்சாத்காரம் தானே தானாக உள்ளிருந்து வெளியே வரும்."

வாகன இரைச்சல்கள் மிகுந்த பரபரப்பான சாலையில், பேருந்தில் அமர்ந்து, காதுகளில் ஹெட்போன்களை அணிந்து மெல்லிய இசையை கேட்டுக் கொண்டிருக்கும் ஒரு நபருக்கு வெளியே இருக்கும் இரைச்சல்கள் எந்தச் சலனத்தையும் ஏற்படுத்துவது இல்லை. அவர் அமைதியாக அந்த இசையை ரசித்துக் கொண்டிருக்கலாம். அதைப்போலவே உட்புறத்தில் பகவானின் இருப்பு எனும் அந்த இசையை மனத்தில் இருத்தி ரசிக்க ஆரம்பிக்கும் சாதகனுக்கு வெளிப்புற இடையூறு எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தாது.

ஒரு நதி தான் பாயும் இடங்களையெல்லாம் வளமாக்கிச் செல்லும். மேடு, பள்ளம், மணல், பாறைகள், மடுக்கள் முதலியவைகளைக் கடந்து போனாலும் நதிநீரின் ஓட்டம் பாதிப்படைவதில்லை. அதைப் போலவே பகவான் பாதாள லிங்கத்தில் இருந்த காலத்தில் இருந்தது முதற்கொண்டு இன்றளவும் பகவானின் அருட்கடாட்சம் எப்போதும்போல் மௌன நதியாக இடையறாது ஓடிக் கொண்டிருக்கின்றது.

நாமும் என்றும் நிலவும் பகவான் சாந்நித்யத்தில் நமது மனதினை இருத்தி, இடையறாது ஓடிக் கொண்டிருக்கும் பகவானின் அந்த அருள் நதியில் இறங்கித் திளைத்தால் மன அமைதி கிட்டும். ஆத்ம விசாரம் கைகூடும். சாக்ஷாத்காரத்திற்கான நற்பயிர்கள் விளையும்.

# பகவான் ரமணரும் பாண்டவ தீர்த்தமும்

*சிறுவயதில், நீச்சல் திறமைக்குப் பெயர் பெற்றவரான பகவான், ஸ்ரீ ரமணாஸ்ரமத்தின் ஆரம்ப நாட்களில், இந்தக் குளத்தில் அடிக்கடி நீராடுவது வழக்கம். பகவானும் நாயனாவும் பாண்டவ தீர்த்தத்தில் நீந்தியதை சூரிநாகம்மாவின் 'கடிதங்கள்' நூலில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.*

*"நாயனாவும் பகவானும் பாண்டவ தீர்த்தத்தில் நீச்சலடிப்பீர்களாமே? என்றார் ஒரு அன்பர். ஆமாம். இதுவும் அந்த நாட்களில்தான். போட்டி போட்டுக் கொண்டு நீந்துவோம். அது ரொம்பக் குஷியாக இருக்கும் என்றார் பகவான்."*

*பாண்டவ தீர்த்தம் தொடர்பான மற்றொரு சுவாரசியமான சம்பவத்தை பகவானின் பால்ய நண்பரான விளாச்சேரி ரங்க ஐயர் இவ்வாறு விவரிக்கின்றார்:*

*"ஒருநாள் பகவான் திடீரென்று, பாண்டவர் தீர்த்தத்திற்குச் சென்று நீந்தலாம். உன்னால் இப்போது நீந்த முடியுமா? என்று கேட்டார். அதற்கு நான் நீந்துவதை இன்னும் மறக்கவில்லை என்றும் அவருடன் வருவதாகவும் கூறினேன். அடுத்த நாள் காலை மூன்று மணிக்கு பாண்டவ தீர்த்தத்திற்குச் சென்று அங்கு மதுரையில் விளையாடியது போல் நெடுநேரம் நீந்தி விளையாடினோம். மற்றவர்கள் குளிக்க வருவதற்கு முன்பே திரும்பி விட்டோம். பகவான் என்னிடம் நாளையிலிருந்து இம்மாதிரிச் சென்று வரலாம். சீக்கிரமாகச் சென்று மற்றவர்கள் அங்கு குளிக்க வருவதற்கு முன்பே திரும்பி விடவேண்டும் என்றார். நானும் சரி என்றேன். இம்மாதிரி சில நாட்கள் பாண்டவ தீர்த்தத்திற்குக் குளிக்கச் சென்றோம்.*

*"ஒருநாள் காலை 4 மணிக்கு பகவான் என்னை எழுப்பி பாண்டவ தீர்த்தத்திற்கு நீச்சலடிக்க அழைத்துச் சென்றார். நாங்கள் குளித்துக் கொண்டிருக்கும்போது குளிக்கும் சத்தம் கேட்டுப் பாண்டவ தீர்த்தத்திற்கு அருகில் தூங்கிக் கொண்டிருந்த இஞ்சிகொல்லை தீட்சிதர் என்பவர் தரையை விரலால் கீறிக் கொண்டிருந்தார். பகவான் அவரிடம், என்ன தக்ளி (நூல் நூற்கும் சாதனம்) கிடைத்து விட்டதா? என்று கேட்டார். விழித்துக் கொண்ட தீட்சிதர் தன்னுடைய கிராமத்தில் தான் இருப்பதாகவும் ஆவணி அவிட்டம் வருவது போலும் அதற்குத் தான் நூல் நூற்கத் தக்ளியைத் தேடுவதாகவும் கனவு கண்டார். அவ்வாறு தேடும்போது தரையைக் கீறிக் கொண்டிருப்பதைத் தெரிந்துதான் பகவான் அவ்விதம் கேட்டார் என்று கூறினார். பிறரின் மனத்தை அளக்கவல்ல ஞானிக்கு கனவை அளப்பதா அரிது?"*






# ஸ்ரீரமணாச்ரம செய்திகள்

## அருள்மிகு ஸ்ரீ பாண்டவேஸ்வரர் ஆலயம் மஹா கும்பாபிஷேகம்

*திருவண்ணாமலை கிரிவலப் பாதையில், அக்னி லிங்கம் அருகில், ஸ்ரீ ரமணாச்ரமத்திற்குக் கிழக்கே அண்ணாமலை அடிச்சாரலில் அமைதியான சூழலில் பழமையான ஸ்ரீ பாண்டவேஸ்வரர் சிவாலயம் அமைந்துள்ளது. ஆலயத்தையொட்டி பாண்டவ தீர்த்தம் மற்றும் பீம தீர்த்தம் ஆகிய குளங்கள் அமைந்துள்ளன.*

*அருணாசலேஸ்வரர் ஆலய திருவூடல் உற்சவத்தின் ஒரு அங்கமாக, ஊடல் முடிந்து சுவாமி ஸ்ரீ பாண்டவேஸ்வரர் ஆலயம் எழுந்தருளி மஹா அபிஷேகம் ஏற்று கிரிவலம் புறப்படும் வழக்கம் உடைய பெருமையுடையது இவ்வாலயம்.*

*இத்தகு சிறப்புகள் வாய்ந்த அருள்மிகு ஸ்ரீ பாண்டவேஸ்வரர் ஆலயம், ஸ்ரீ ரமணாச்ரமம் சார்பாக புனருத்தாரணம் செய்யப்பட்டு, ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் கடந்த 12/12/2022 திங்கட்கிழமையன்று காலை 6 மணிக்கு மேல் 6.30 மணிக்குள் சிறப்பாக நடைபெற்றது. அடியார் பெருமக்கள் திரளாகக் கலந்து கொண்டு ஸ்ரீ பாண்டவேஸ்வரர் திருவருள் பெற்றனர்.*

## அருணாசலேசுவரர் கிரிபிரதக்ஷிணம்

*ஸ்ரீ அருணாசலேசுவரர் வருடத்திற்கு இரண்டுமுறை அண்ணாமலையை கிரிவலம் செய்வது வழக்கம். ஒன்று தீபோற்சவத்தின்போது மற்றொன்று திருவூடல் உற்சவத்தன்று (மாட்டுப் பொங்கலன்று).*

*கார்த்திகை தீபோற்சவத்தின் அங்கமாக 8/12/2022 அன்று உண்ணாமுலை உடனாகிய அண்ணாமலையார் கிரிபிரதக்ஷிணம் செய்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.*

*அண்ணாமலையாரை எதிர்நோக்கி அன்பர்கள் சாலை நெடுகிலும் திரண்டிருந்தனர். ஆச்ரமம் சார்பில் சுவாமி அம்மனுக்கு வஸ்திரங்கள் சாற்றப்பட்டு சிறப்பு வழிபாடு செய்யப்பட்டது.*






# ரமணா கேந்திரா டிரஸ்ட், சென்னை

## அனந்தசாமி ஞானமண்டபம் 41, அலமேலு மங்காபுரம், திருமயிலை - சென்னை 600004

## 143வது ஸ்ரீ ரமண ஜெயந்தி பெருவிழா நிகழ்வுகள் -2023

**2 ஜனவரி, திங்கள், மாலை 06:00 மணி**

*வித்வான் ராமகிருஷ்ண மூர்த்தி - வாய்ப்பாட்டு; விதூஷி சாருமதி ரகுராமன் - வயலின்; வித்வான் அனந்த R கிருஷ்ணன் - மிருதங்கம்*

**3 ஜனவரி, செவ்வாய், மாலை 06:00 மணி**

*வித்வான் பாலக்காடு டாக்டர் ராம்பிரசாத் - வாய்ப்பாட்டு; வித்வான் H N பாஸ்கர் - வயலின்; வித்வான் அனந்த R கிருஷ்ணன் - மிருதங்கம்; வித்வான் ஸ்ரீ சுந்தரகுமார் - கஞ்சிரா*

**4 ஜனவரி, புதன், மாலை 06:00 மணி**

*வித்வான் ரமணா பாலசந்திரன் - வீணை; வித்வான் அனந்த R கிருஷ்ணன் - மிருதங்கம்*

*லட்சார்ச்சனை ஜனவரி 3, 4 மற்றும் 5—ஆம் தேதிகளில் நடைபெறும்.*

## 143வது ஸ்ரீ ரமண ஜெயந்தி விழா 7 ஜனவரி, சனிக்கிழமை

**காலை 06:00 மணி முதல் 12:00 மணி வரை**

*மங்கல இசை, மஹன்யாசம், ஏகாதச ருத்ர அர்ச்சனை, உள்ளது நாற்பது, அக்ஷரமண மாலை பாராயணம்*

*12.15 மதியம் மஹா தீபாராதனை, அன்னதானம், மதிய உணவு பிரசாதம்.*

**மாலை 04.00 06.00**

*04.00 மணி விஷ்ணு சஹஸ்ரநாமம், 04.30 மணி "ஸ்ரீ ரமண சந்நிதிமுறை" பண்ணிசைப் பாடல் – மயிலை கபாலீஸ்வரர் திருக்கோயில் ஓதுவார் சிவத்திரு சத்குருநாதரின் மாணவிகள்.*

*05.15 மணி "ரமண கீதம்" திருமதி ஜெயஸ்ரீ ஜெயராம கிருஷ்ணன் அவர்களின் மாணவர்கள்.*

*இரவு 06.45 மணி மயிலை மாட வீதிகளில் ஸ்ரீ ரமணர் திருவுருவ திருவீதி உலா*

*07.15 மணி முடிவாக அக்ஷரமணமாலை கூட்டுப் பாராயணம்.*

**பொள்ளாச்சி கோட்டூர்**
**ஸ்ரீ அருணாசல அக்ஷரமணமாலை சேவை மையம்.**

*ஆசிரியர் பாலு அவர்கள் இல்லத்தில், 25.12.2022 அன்று ஸ்ரீ ரமண மகரிஷிகளின் 143 வது ஜெயந்தி தின விழாவினையொட்டி திருவாசக முற்றோதல் நடைபெற்றது. பொள்ளாச்சி ஸ்ரீ அருணாசல ரமண சத்சங்கம் தலைவர் ரமணகுமார்–தமயந்தி தம்பதியினர் மற்றும் பொள்ளாச்சி உடுமலை அடியார் பெருமக்கள் கலந்து கொண்டனர்.*

*திருவாசகம் முற்றோதல் நிகழ்ச்சியை பொள்ளாச்சி திருக்கயிலாயம் சிவனடியார்கள் திருக்கூட்டம் முன்னின்று நடத்தினார்கள். மதியம் தீபாராதனைக்குப் பின் பிரசாதம் வழங்கப்பட்டது.*

## 143வது ஸ்ரீ ரமண ஜெயந்தி விழா

**ரமணாலயம், குரோம்பேட்டை, சென்னை.**
**(ஸ்ரீ ரமணாச்ரமத்திற்கு பாத்தியப்பட்டது )**

**7 ஜனவரி, 2023**

*காலை 08.00 மணிக்கு வேதபாராயணம், ஸ்ரீ ரமண அஷ்டோத்ர பூஜை. 09.30 மணிக்கு ஸ்ரீ ரமண சந்நிதி முறை பண்ணிசை, பக்க வாத்தியங்களுடன், திருவாசக செந்நாவலர் மயிலை சத்குருநாத ஓதுவார் அவர்கள் நிகழ்த்துவார்கள்.*

*காலை 11.00 மணி அக்ஷரமணமாலை, புனர்வசு வண்ணம் பாராயணம். 11.30 மணிக்கு மஹா தீபாராதனை, மதிய உணவுப் பிரசாதம். அனைவரும் கலந்து கொள்ளவும்.*

## 143வது ஸ்ரீ ரமண ஜெயந்தி விழா

**ஸ்ரீ முருகனார் மந்திரம், இராமநாதபுரம்**

**7 ஜனவரி 2023**

*காலை 08.00 மணி முதல் மதியம் 12.00வரை: பூஜை, அக்ஷரமணமாலை பாராயணம். தாயுமானவர் தபோவன ருத்ரானந்த மஹராஜ் அவர்கள் தலைமை உரை, மற்றும் டாக்டர் சந்திரசேகர் அவர்கள் சொற்பொழிவு. தீபாராதனை, அனைவர்க்கும் அன்னதானம் பிரசாதம்.*

## 'எலக்ட்ரிக்கல் சுந்தரம்'



*'எலக்ட்ரிக்கல் சுந்தரம்' என்று அனைவராலும் அழைக்கப்பட்ட சுந்தர மூர்த்தி, 1980–களின் தொடக்கத்தில் சிறுவயதில் தனது உரிமையாளருடன் முதலில் ஆச்ரம வேலைக்கு வந்தார்.*

*அவரது உரிமையாளரின் காலத்திற்குப் பிறகு, சுந்தரம் சுமார் முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக ஆச்ரம எலக்ட்ரிக்கல் மற்றும் பிளம்பிங் வேலைகளைப் பார்த்து வந்தார்.*

*இயல்பிலேயே அமைதியாகப் பேசக்கூடியவராகவும், மென்மையான நடத்தை உடையவராகவும் இருந்தார். காலையில் பணிக்கு வந்த பிறகு, அமைதியாக பகவானின் சமாதியை வலம் வருவதை வழக்கமாக வைத்திருந்தார்.*


*கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன், வயது மூப்பின் காரணமாக ஓய்வுபெற்று, வீட்டில் இருந்து வந்த இவர், உடல் நலக்குறைவால் 13/11/2022 அன்று தனது 70–வது வயதில் காலமானார்.*

*இவருக்கு மனைவி மற்றும் இரண்டு மகள்கள் மற்றும் ஒரு மகன் உள்ளனர். இவரது மகன் செந்தில் தற்போது ஆச்ரமத்தில் எலக்ட்ரீஷியனாகப் பணியாற்றி வருகிறார். அன்னாரைப் பிரிந்து வாடும் குடும்பத்தாருக்கு 'ரமணோதயம்' ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறது.*

---

## கிரிவலம் வரும் பௌர்ணமி நாட்கள் - 2023

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| *ஜனவரி* | 6 | *வெள்ளி* | *அதிகாலை 2.14* | 7 | *சனி* | *காலை 4.37* |
| *பிப்ரவரி* | 4 | *சனி* | *இரவு 9.30* | 5 | *ஞாயிறு* | *இரவு 11.58* |
| *மார்ச்* | 6 | *திங்கள்* | *மாலை 4.17* | 7 | *செவ்வாய்* | *மாலை 06.10* |
| *ஏப்ரல்* | 5 | *புதன்* | *காலை 9.19* | 6 | *வியாழன்* | *காலை 10.04* |




# ஸ்ரீ ரமணாஸ்ரம நூற்றாண்டு விழா

செப்டம்பர் 1, 2022 முதல் டிசம்பர் 28, 2023

பகவானின் 144–ஆவது ஜயந்தி வரை 16 மாதங்கள்

ஸ்ரீ ரமணாஸ்ரம நூற்றாண்டு விழா

வைபவம் கொண்டாடப்படுகின்றது.

---

Ramanodhayam - Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

*Printed and Published by:* A. Kumar Raja,
20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.

## Seminar on the Life & Teachings of Bhagavan Sri Ramana Maharshi

## On Sunday, 8th January, 2023

# 143th Jayanthi Celebrations

**Sunday, 8th January, 2023**

| | | |
|---|---|---|
| 2.30 - 3.00 pm | : | Veda Parayanam |
| Compere | : | Mrs. Vasantha Raghavan |
| 3.00 - 3.05 pm | : | Invocation Song by Baby.Sahana |
| 3.05 - 3.10 pm | : | Welcome address by Mrs. Vasantha Raghavan |
| 3.10 - 3.40 pm | : | புலவர் இளங்குமரன் "திருமுறையும் மணமாலையும்" |
| 3.40 - 4.10 pm | : | Mr.கிருஷ்ணா [தினகரன் ஆன்மீகப் பகுதி ஆசிரியர்]- "ஆத்மவிசாரமாம் ராஜமார்க்கம்" |
| 4.11 - 5.00 pm | : | Dr.ராம்மோஹன் [ஆசிரியர்'ரமணோதயம்]- "ஆர் ஒருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்" |
| 5.00 - 5.15 pm | : | தேநீர் இடைவேளை |
| 5.15 - 6.00 pm | : | முனைவர் வ.வே.சுப்ரமணியன் [வ.வே.சு-முன்னாள் முதல்வர், விவேகானந்தா கல்லூரி] "இன்றைய சூழலுக்கு அருமருந்தாம் ரமணோபதேசம்" |
| 6.00 - 6.35 pm | : | ரமண வழிபாட்டுப் பாடல்கள்: சிவத்திரு.ஸ்ரீகாந்த் குழுவினர் |
| 6.35 pm | : | மங்கல வாழ்த்து |

Registered with the Registrar of Newspaper for India  RNI No.:TNTAM/2001/5542

